www.padippakam.com

298
1/6/95

# காகம்

**Kakam**



6 Juni 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

முகம்

## இது கதையல்ல வாழ்க்கை

நிருஜன்
வயது 10
தமிழ் பையன்.
டென்மார்க்கில் பள்ளிசெல்கிறவன்.
இன்று சனிக்கிழமை.
வழமைபோல் எழுந்துவிட்டான்.
ரி.வியில் அதே ரொம் ஜெரி சண்டைதான்.
இது அவனுக்கு சலிப்பு.
கொம்பியூட்டரில் கையைவிடுகிறான்
அங்கும் சண்டைதான்.
என்ன விளையாடலாம்? இது அவனது வினா.

அம்மாவோடு...? அவள் சமைக்கவேண்டும்.
அப்பாவோடு.......? அவர் பந்தடி பார்க்கிறார்.
சீமோனுக்கு ரெலிபோன் பண்ணுவம்.
தொலைபேசி இலக்கங்களை அமத்துகிறான்.
.....சீமோனுக்கு நேரமில்லை.
......யோனாஸ்...அவன் வீட்டிலில்லை.
........கிளவ்ஸ் ...அவனுக்கு விருப்பமில்லை.
யாக்கொப்.....அவன் பேப்பர்போடப்போட்டான்.
எல்லாமே சரிவராத பதில்கள்.
நிருஜன் வெளியே புறப்படுகிறான்...
சட்டைப்பையில் 5 குரோன்கள்.
அது அவன் இனிப்பு வாங்க.
படைப்பாளிகளே!
இவர்களைப்பற்றியும் நாங்கள் எழுதலாமே.

ஆசிரியர்— காகம்



படிப்பகம்

www.padippakam.com

# காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.*
*– ஒரு தாய்*

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 6 – ஆனி. 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 78 65 8

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு. ரவி.......TlF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு. செல்வன்........TlF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் ஓவியர் சிவநாதன்

உள்ளே..............சிறுகதைகள்


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 6 | தனித்தட்டுகள் |
| 9 | சட்டை |
| 12 | குளிரும் போரும் |
| 13 | கலகம் |
| 16 | வைராக்கியம் |
| 18 | உப்பு |
| 21 | பொன்வண்டுப் பொன்ராசு |
| 23 | அப்பாக்குட்டியின் அவஸ்தை |
| 25 | உளைச்சல் |
| 27 | நாங்கள் |
| 31 | மனதோடு பேசுதல் |
| 32 | உச்சம் என்பது |
| 36 | தோப்புக்கரணங்கள் |


**சந்தாதாரர்களுக்கு.........**

இதுவரை காகத்திற்கான சந்தாவை செலுத்தாதவர்கள் தயவுசெய்து அதனைச் செலுத்தி; காகத்தின் வளர்ச்சிக்கு உதவுங்கள். நன்றி!

சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.
..........................காகம்......................



படிப்பகம்

www.padippakam.com

# H.C.ANDERSENனின் கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்

## .......பட்டாணிக்கடலையின்மேல் அந்த இளவரசி...............................



*Andersen Hans Christian(2.4.1805 – 4.8.1875 ) .ஐரோப்பிய இலக்கிய உலகில் 1800 களின் தலைசிறந்த கவிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். கவிதைகள், கற்பனைக்கதைகள், கதைகள்,பயணஅனுபவங்கள், வாழ்க்கைக்குறிப்புகள், என தனது இலக்கியங்கள் மூலமாக எழுத்துலகில்பிரகாசித்தவர். பிறப்பால் இவர் ஒரு டனிஸ் சமூகத்தவராக இருந்தாலும்: இவரது படைப்புக்கள் உலகின்135மொழிகளில்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.தமிழில்......?*

முன்னொரு காலத்தில் ஒரு இளவரசன் இருந்தான் அவன் ஒரு நல்ல இளவரசி வேண்டுமென்று ஆசைகொண்டு; அவ்வாறு ஒரு இளவரசிக்காக உலகம் முழுவதும் சுற்றிவந்தான்.அவன் சென்றஇடங்களிலெல்லாம் பல இளவரசிகளைக் கண்டபோதிலும், அவர்களில் ஏதோ குறைகளைக்கண்டதினால் உண்மையான ஒரு இளவரசி இன்னமும் தனக்கு கிடைக்கவில்லையே என மனமுடைந்தவனாய் வீடு திரும்பினான்.

ஓர் இரவு இடி, மின்னலுடன் "சோ" என பெருமழை பொழிந்துகொண்டிருந்தது-அந்தப்பயங்கரமான நேரத்தில் அரண்மனைக்கதவில் தட்டும் சப்தம்கேட்டு, அந்த வயதான அரசன் கதவைத்திறந்தான். அங்கே ஒரு இளவரசி நின்று கொண்டிருந்தாள்.ஆனால் அவள்....கடவுளே!அந்தப் பெரு மழையில் நனைந்துதோய்ந்த வண்ணமாய் காணப்பட்டாள். அவள் தலைமயிரிலிருந்தும், அவள் அணிந்திருந்த ஆடைகளிலிருந்தும் தண்ணீர் கீழே சிந்தியவாறு இருந்தது-அத்தோடு மழைநீர் அவள் மூக்கோரமாக வழிந்து அவள் அணிந்திருந்த சப்பாத்தினுள் நிறைந்து குதிவழியாக வெளியேறியது-அப்பொழுது அவள் தான் ஒரு உண்மையான இளவரசி என எடுத்துக்கூறினாள். ஆமாம் நாம் அதைத்தெரிந்துகொள்ளலாம் என்றபடி உள்ளே அழைத்துவந்து வயதான அரசியிடம் ஒப்படைக்க அவள் எதையும் வெளியே சொல்லிக்கொள்ளாமல் அந்தப் படுக்கை அறையினுள் நுழைந்து கட்டிலின் மேலிருந்த துணிகளை எல்லாம் எடுத்துவிட்டு ஒரு கடலையை கட்டிலின் அடியில்வைத்து அதற்குமேல் இருபது மெத்தைகளை அடுக்கி அதற்குமேல் இன்னமும் இருபது மென்மையான போர்வைகளை அடுக்கினாள்.அதன்மேல் அந்த இளவரசி அன்றிரவு படுக்கவைக்கப்பட்டாள். அவள் எப்படி நன்றாக உறங்கினாளா? என்று மறுநாள் காலை அவளை வினவினார்கள்.

" ஓ! தாங்கமுடியவில்லை.கட்டிலில் என்ன இருந்தது என்று கடவுளுக்குத்தான் தெரியும்.....நான் இரவுமுழுவதும் எனது கண்களை மூடவில்லை எனது படுக்கை மிகவும் கடினமாக இருந்தது.என் உடல் முழுவதும் இரத்தம் கண்டிய அடையாளமாகிவிட்டது".என்றாள் அவள். அவளால் இந்த இருபது போர்வைக்கூடாகவும் இருபது மெத்தைக்கூடாகவும் கடலையின் அழுத்தத்தை உணர முடிந்ததால் அவளை ஒரு உண்மையான இளவரசியே என தெரிந்து கொண்டார்கள்.அந்த இளவரசன் அந்த உண்மையான இளவரசியைக்கண்டு அவளை தனது வாழ்க்கைத்துணைவியாக்கிக்கொண்டான்.அந்தக் கடலை கலைக்கூடமொன்றில் வைக்கப்பட்டு இன்றும் அதை காணக்கூடியக இருக்கிறது.

........முற்றும்.......




படிப்பகம்

www.padippakam.com

# தனித்தட்டுகள்

**விழி**




வாரவிடுமுறை வந்துபோனது. திங்கள்காலை 7 மணிக்கு வந்து நான்வேலையை பாரமெடுத்தபோது ஈடித் முதல்நாளிரவு இறந்துவிட்டாள் என்றசெய்தி எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. மனம் ஒருதரம் அடித்துக்கொண்டது. காலை றிப்போட் முடிந்தபோது எல்லோரும் ஈடித்திற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக எழுந்துசென்றனர். யர்ராவது இறந்துபோனால் இவ்வாறுசெய்வது எங்கள்நிலைய வழக்கம்.

"நீயும் வருகின்றாயா?" என்னுடன் நெருங்கிப்பழகும் கிறேதா என்னை அழைப்பது கேட்டது.

"ஆம்" என்றேனே தவிர இருந்த இடத்தால் எழும்பமுடியவில்லை. எனது நினைவுகள் பின்நோக்கின.........

⁂

நான் எனது படிப்பைமுடித்துக்கொண்டு அந்த வயோதிபர்களுக்கான பராமரிப்பு நிலையத்தில் வேலைக்குச் சேர்ந்தபோது சற்று மகிழ்ந்துதான்போனேன். நிலையத்தில் வசிப்பவர்களும் என்னுடன் வேலைசெய்பவர்களும் அன்பாக நடந்துகொண்டது மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நிலையம் என்று சொல்வதைவிட அதை ஒரு பெரிய வீடு என்றுதான் சொல்லவேண்டும். ஒருபுறத்தில் சிறிய காடும் மறுபுறத்தில் பூச்செடிகளும், பழமரங்களுமாக சுற்றுப்புறச்சூழ்நிலையும் அமைதியாக மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. நானும் எனது வேலைத்திறமையினால் விரைவிலேயே அங்கு ஒரு நல்லபெயரைத் தேடிக்கொள்வதற்கு அதிகநாட்கள் ஆகவில்லை.

"அவள் அன்பானவள். பழகுவதற்கு இனியவள்" ...இத்தகைய சொற்களை எனதுகாதுகள் அடிக்கடி கேட்டுக்கொண்டன. "கறுப்பு இளவரசி, ஸ்ரீலங்கா ராணி" இவை 84 வயதான லைவ் என்னை செல்லமாக அழைக்கும் பெயர்கள்.

" நீ ஸ்ரீலங்காவிற்கு திரும்பிப்போனால் எப்படியும் சுகாதார மந்திரிப் பதவி எடுத்துவிடவேண்டும் இங்கே அதற்கான படிப்பெல்லாம் படித்துமுடித்துவிட்டாய்தானே......" இது 90 வயதாகியும் இன்னும் இளைஞனுக்குரிய மனப்பக்குவத்துடன் இருக்கும் ஜோனாசின் கேலிப்பேச்சு.

தாதிமாருக்குரிய அந்த வெள்ளை உடையுடன் படங்களாக எடுத்து என் பெற்றோருக்கு அனுப்பி வைத்தேன். அப்பாவும் " மகளே உன்னை ஒரு டாக்டராக்கிப் பார்க்கத்



படிப்பகம்

www.padippakam.com

தான் ஆசைப்பட்டேன்.ஆனால் நீயோ வாத்தியாரம்மாவாக வந்து உனது ஆசையை பூர்த்திசெய்து கொண்டாய். இன்று இந்த வெள்ளையுடையுடன் உன்னைப்பார்க்கும் போது எனது ஆசையில் பாதி தீர்ந்ததுபோலுள்ளது" என்று பதிலுக்கு எழுதினார்.

இப்படி எல்லாமே நல்லபடியாகத்தான் நடந்துகொண்டிருந்தன;நான் ஈடித்தைச்சந்திக்கும்வரையில்.
"ஈடித்" அவளுக்கு 70 வயது சுமாரான உயரமும் நிறைந்த ஆடை அலங்காரங்களுடனும் கூடியவள். அயற்கிராமத்தில் வசிப்பவள்.புற்றுநோயுடன் ஆயுள் அதிகநாட்களுக்கில்லை என்ற வைத்தியர்களின் ஆயுட்கணிப்புடன் எங்கள்நிலையத்திற்கு வந்துசேர்ந்தாள். முதற்பார்வையிலேயே என்னை அவளுக்குப்பிடிக்கவில்லை என்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.
மறுநாட் காலை நான்வேலைக்குவந்தபோது ஈடித்தைப் பராமரிக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது.ஓரிருநாட்கள் அவள் எதுவும் சொல்லவில்லை என்றாலும் மூன்றாம் நாளே என்னில் வெறுப்பைக்காட்ட ஆரம்பித்துவிட்டாள். "எங்கள் நாட்டில் டனிஸ்காரருக்குப்பஞ்சமாகிவிட்டதா? என்று உரக்கக்கத்துவாள். காலை உணவுக்காக வெளியே வரும்போது " ஆகா இந்த வெள்ளை மனிதர்களைப் பார்க்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது" என்பாள். அவளுக்குரிய மருந்து மாத்திரைகளை கொடுத்தால் "கறுப்பு மனிதர்களுக்கு இத்தகைய அறிவு குறைந்துதான் இருக்கிறது." என்று சொல்லி அவைகளை குடிக்க மாட்டாள். அதேவேளை வேறுயாராவது வந்து அதைக் கொடுத்தால் மறுபேச்சில்லாமல் குடித்துவிடுவாள்.

அவளுக்குத்தேவை அந்த வெள்ளைத்தோல்நிறம்தான். நானும் மற்றவர்களைப்போல அதே கல்வித்தரத்துடன் இருக்கிறேன் என்பதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டாள்."உங்கள் நாடு இப்படியானது.....உங்கள்நாட்டில் இப்படித்தான் செய்வார்களா?" என்று எனது ஒவ்வொரு செய்கைக்கும் அர்த்தம் கண்டுபிடித்து என்னைக்குறை கூறியதுமட்டுமல்லாமல் எனதுநாட்டையும் குறைகூறியதை என்னால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை.
ஈடித்தின் வார்த்தைகளால் நான் சற்றுத்துவண்டுதான் போனேன். வேலையைவிட்டுவிடுவோமா என்றுகூட யோசிக்கத்தொடங்கினேன்.

இப்படியானநேரத்தில் ஒருநாள்த்தான் ஈடித் அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தாள்.
அன்று காலை நான் ஈடித்தின் உதவிக்குப் போனபோது என்னுடைய உதவியை பெற மறுத்துவிட்டாள். என்னுடைய உதவி தனக்குத்தேவையில்லை என்றும், "வெள்ளைநிறத்தவர் யாராவதுவந்துஉதவி செய்தால் அதை ஏற்பேனே அன்றி உனது கை இனிமேலும் என்னில் படவேண்டாம்" என்றுவிட்டாள். அன்று ஈடித் குளிக்கவுமில்லை, காலை உணவோ மாத்திரைகளோ சாப்பிடவுமில்லை. என்னை மறுத்தவளுக்கு தாங்களும் உதவிசெய்யமாட்டோமென்றுஎன்னுடன் வேலைசெய்யும் மற்றவர்களும் ஈடித்திற்கு உதவமறுத்துவிட்டார்கள். விடையம் நிலையத்தலைவர்வரை போயிற்று.
"தரப்படும் உதவியை ஏற்கத்தான்வேண்டும்." என்ற நிலையத்தலைவரின் கட்டளைக்கும் ஈடித் காதுகொடுக்கவில்லை.

மதியமுமாயிற்று. ஈடித் படுக்கையிலேயே இருந்தாள். நிலைமை இப்படியே போனால் எப்படி? ஈடித்தின் உடல்நிலையை கருத்தில் எடுத்து நானே பின்வாங்கிக் கொண்டேன். ஈடித்தை பராமரிக்கும் பொறுப்பு அன்றிலிருந்து என்னுடன் ஒன்றாகப்படித்து ஒன்றாகவே வேலைக்கும் சேர்ந்த மீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாளாக ஆக ஈடித் அதிக நோய்வாய்ப்படத்தொடங்கினாள் அடிக்கடி உதவிகேட்டு அழைப்பு மணியை அடிப்பாள். எவரும் உதவிக்கில்லாத நேரத்தில் நான் அவளது அறைக்குப்போனால் "நீ திரும்பவும் வந்துவிட்டாயா? என்ற அவளது கத்தலுடன் நான் திரும்பி வந்துவிடுவதுண்டு. உதவியின்றி இருப்பாளே தவிர ஒருநாளும் என் உதவியை அவள் ஏற்றதில்லை.

கடைசியில் ஈடித் படுத்தபடுக்கையானாள். எழும்பி நடமாடுவதற்குத் தெம்பின்றிப்போனது.
வாழ்வும் சாவுமாக போராடிக்கொண்டிருந்த கடைசிக்காலகட்டம். அன்று எனக்கு இரவுவேலை. இரவுநேரத்தில் நான்குபேர்கள் மாத்திரம் அப்பகுதிக்குப் பொறுப்பாக இருப்பது வழக்கம். மற்ற மூன்றுபேரும் ஒவ்வொரு வேலையாக இருந்தநேரத்தில்தான் ஈடித் அழைப்புமணியை அடித்தாள். என்னைத்தவிர வேறுஎவரும் அருகில் இல்லாததால் நானே அவளிடம் போகவேண்டியதாயிற்று. ஈடித் படுத்திருந்த நிலையில் பாதிக்கண்களால் என்னைப் பார்த்தாள். அவளால் பேசமுடியாத நிலை.

கண்கள் வெறுப்பை உமிழ்ந்தன. வெளியே போ! என்ற அர்த்தத்தில் கைகள் சைகை காட்டின.இந்த இறுதி மரணப்போராட்ட நிலையிலுமா இவள் என்மீது வெறுப்பைக் காட்டுகின்றாள் என கண்கள் கலங்கியபடி வெளியே வந்துவிட்டேன்.

ஈடித் எங்கள்நிலையத்திற்கு வந்தநாட்தொடக்கம் அந்தப் பெரியசாமியை நான் அடிக்கடி நினைத்துக்கொண்டேன்."பெரியசாமி" இந்தியவம்சாவழியான மலையகத்துத்



படிப்பகம்

www.padippakam.com

தோட்டத்தொழிலாளி. எங்கள் தென்னந்தோட்டத்து வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்தவன். அப்பாவுக்கு அவன்தான் வலதுகை. வயலிலும் தோட்டத்திலும் அப்பாவுக்கு உதவியாக இருந்துவந்தான். எதுசொன்னாலும் "ஆமாங்கையா" "ஆமாங்கம்மா" என்பானே தவிர அதிகம் பேசமாட்டான்.தனக்கு இந்தியாவில் உறவினர்கள் இருப்பதாகவும் என்றோ ஒருநாள் தான் அவர்களைச் சென்று பார்த்துவரவேண்டும் என்று மட்டும் அடிக்கடி சொல்லிக்கொள்வான்.அந்தக் குரலில் இருந்த ஏக்கத்தை என்னால் அன்று புரிந்துகொள்ளத்தான் முடியவில்லை.

அழகழகான இரண்டு குழந்தைகள் அவனுக்கு. அம்மம்மாவின் மிரட்டல்பார்வையையும் பொருட்படுத்தாது அந்தக்குழந்தைகளைத் தூக்கிவிளையாடியது இன்றும் என் ஞாபகத்தில் இருக்கிறது.சிறியவீடென்றாலும்

பெரியசாமியின் மனைவி தனதுவீட்டை மிகநேர்த்தியாக வைத்திருப்பாள்.தைப்பொங்கலன்று அவளிடம் பொங்கல் வாங்கிச் சாப்பிட்டதற்கு அம்மம்மாவிடம் குட்டு வாங்கியதும் "உவளுக்கு இன்றுமுழுக்கச் சாப்பாடில்லை" என்றுஎன்னை வீட்டுக்குவெளியே நிற்கவைத்ததும் எனது நினைவில் வந்து உறுத்தியது.

பெரியசாமி அடிக்கடி தன்குடும்பத்துடன் தன்சொந்த ஊரான பண்டாரவளைக்கு போய்வருவான்.அப்போதெல்லாம் எனது அக்கா அவனிடம்சொல்லி நிறையபூக்கன்றுகள் தருவிப்பாள்.அவற்றை பாத்திகட்டி நட்டு தண்ணீர் விட்டு அழகுபார்ப்பாள். வீட்டுமுற்றத்தில்

அந்தப்பூக்கன்றுகள் பூவாகப்பூத்துச்சொரியும்.அந்தப்பூக்களும் எங்கள் வரவேற்பறை சாப்பாட்டறையெங்கும் பூச்சாடிகளைநிறைத்து அழகுசெய்யும். பெரியசாமிகொண்டுவந்த பூக்கள்தான் வீட்டுப்படியேறி உள்ளே வந்தனவே தவிர அந்தப்பெரியசாமி ஒருநாளும் எங்கள்வீட்டுப் படியேறி வந்ததில்லை. வெளிமுற்றத்துடனேயே அவனது அலுவல்கள் முடிந்தாகவேண்டும்.அவன் எங்கள்வீட்டிற்கு வரும்போது சாப்பிடவும் குடிப்பதற்குமாக தனியே பாத்திரங்கள் இருந்தன. அவை வீட்டிற்குவெளியே ஓரிடத்தில் கவிழ்க்கப்பட்டிருக்கும்.

அந்தப்பெரியசாமியும் நானும் ஒன்றானவர்களா? ஒரேநிலையில் உள்ளவர்களா? ஈடித்தை சந்தித்ததிலிருந்து இந்தக்கேள்வியை கேட்டு எனமனம் என்னையும் அந்தப் பெரியசாமியையும் ஒப்பீடு போட்டுக்கொண்டது. நான் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம்வாங்கியவள். இன்றும் அந்தப்பட்டப்படிப்பின் மிச்சசொச்சங்களை பெயரின் பின்னால் கட்டித்தொங்கவிட்டுக்கொண்டிருப்பவள். அதுவுமில்லாமல்ஊரிலேயே எங்கள் குடும்பம்தான்உயர்ந்தகுடும்பமெனப்பெயர்பெற்றது.

ஒரு சாதாரண மலையகத்தொழிலாளி பெரியசாமியும் நானும் ஒன்றாகிவிடுவோமா? அந்தப்பெரிய சாமியின் குழந்தைகளும் எனது குழந்தைகளும் ஒன்றாகிவிடுவார்களா?

பெரியசாமியைப்போல தனித்தட்டுகள் இங்கு எங்களுக்கு வைக்கப்படவில்லையேதவிர
இதுவும் ஒருவகைத்தீண்டாமைதான். முடிவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு உழைப்பிற்காக இடம்பெயர்ந்த பெரியசாமியும் இலங்கையிலிருந்து டென்மார்க்கிற்கு அகதியாக இடம்பெயர்ந்த நானும் இன்று ஒன்றாகிப்போனோம்.

***

"ஈடித்" அவள் எவ்வளவு அவள் எவ்வளவு அமைதியுடன் தூங்குகின்றாள். அவளது முகத்தில்தான் எவ்வளவு சாந்தமும் அமைதியும்."

அஞ்சலிசெலுத்தச்சென்று திரும்பியவர்கள் இப்படிப் பேசிக்கொள்கிறார்கள்.

ஆம்! அவள் அப்படியே அந்தஅமைதியுடனேயே தூங்கட்டும்.
நான் போய்ப்பார்த்து அவளது அந்த அமைதி கலையக்கூடாது.

அவளது ஆத்மா அமைதியாகவே சாந்தி அடையட்டும். இருந்த இடத்திலேயே அவளது ஆத்மசாந்திக்காக ஒரு கணம் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.
நான் அவளைச்சென்று பார்த்து அஞ்சலி செலுத்தாதது எனது உத்தியோக தர்மத்திற்கு பிழை என்றாலும் ஏதோ ஒருவிதத்தில் அது சரியெனவே எனக்குப்படுகிறது.

***

ஈடித் இறந்த கையோடு கையாக அவள் வாழ்ந்த அறை அவசரஅவசரமாக துப்பரவுசெய்யப்படுகிறது.
அந்த இடத்தில் வசிப்பதற்காக "அல்பிரட்" தனது பெட்டி படுக்கைகளுடன் வந்திறங்கிக்கொண்டிருக்கிறான்.

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# சட்டை

.........கரவைதாசன்.............

மதனாவிற்கு தன்னை அனாதரவற்று தன்னந்தனியாக அந்த புறாக்கூட்டறைக்குள் விடப்பட்டதுபோலிருந்தது. கடந்தமுப்பது நாட்களாக இந்தப்புறாக்கூட்டறைக்குள்தான் சுற்றிச் சுற்றி வந்து மூர்த்தியின் கழுத்தை வளைத்துப்பிடித்து முத்தம்கொடுத்தும் சிரித்தும் பேசியும்கொண்டு "முதலில் கராச்சில நிக்கிற உந்த பழையகாரை வில்லுங்கோ வித்துப்போட்டு ஒரு 94ம் ஆண்டு மஸ்டா எடுங்கோ அப்புறம் சிங்கப்பூருக்குப்போய் எனக்கு தாலி வாங்கிக்கொண்டு வாங்கோ" இன்னும் என்னென்னவோ கனவுகளையெல்லாம் நிறைத்து உரைத்துக்கொண்டிருந்தவளுக்கு இப்படி ஒரு நினைப்பு, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்வரையில் வந்ததில்லை. றேஸ்மொடல் மோட்டார்ச்சைக்கிள் படம் ஒட்டப்பட்டிருந்த அறைக்கதவில் கதவுக்கு நேரே வெளியில் நடப்பவற்றை பார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வில்லைபொருத்திய துவாரம், திறப்புத்துவாரத்தில் விடப்பட்டிருந்த திறப்பு, மறுபக்கம் கட்டில், மூலையோடு குளிர்சாதனப்பெட்டி, அதை தொட்டும்தொடாததுமாக வைக்கப்பட்டிருந்த இரண்டுபேரின் இருக்கைகளைக்கொண்ட சோபா. கட்டிலின் கால்மாட்டில் ரீ.வி யும் வீடியோவும், ஒரு பாட்டுப்பெட்டியும் இருந்தன. ஜன்னல் அருகோடு மேசை இருந்தது.மேசையில் சில சினிமாப்படக்கொப்பி களும், பாட்டுக்கசட்டுகளும் சுவரோடு அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவைதவிர சிலபுத்தகங்களும் கடிதங்களும் இருந்தன. அருகே இருந்த குளியலறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது. எத்தனைதரம்தான் இவற்றை திருப்பித்திருப்பி பார்த்துக்கொண்டிருப்பது. அப்பா அம்மா மூன்று தம்பிமாரென 6 பேரைக்கொண்ட குடும்பத்தில் ஓர் விசாலமான தொடர்மாடிக்கட்டடத்தில் வாழ்ந்து வந்தவளுக்கு மூர்த்தியுடன் இந்த புதிய புறாக்கூட்டு வாழ்க்கை ஆரம்பித்து சொற்ப காலங்கள் ஆகின்றன. மூன்று வருடங்களுக்கு முன்பாக அவள் பக்குவப்பட்டு அடுத்தடுத்த மாதமளவில் அவன் கேட்க, அவள் எதையுமே





படிப்பகம்

www.padippakam.com

யோசிக்காமல் பாடசாலையில் தனது டெனிஸ் தோழிகளுக்கு தனக்கும் ஒரு காதலன் இருக்கிறான் என்று சொல்லிக்கொள்வதற்காக ஒப்புக்கொள்ள காதலர்களென ஒரு உறவை ஏற்படுத்திக்கொண்டாலும் அவளுக்கு 18 வயது வரும்வரை காத்திருந்து 18 வயதுமுடிந்த அடுத்தநாளே அவளின் எண்ணப்படி வீட்டைவிட்டு அவனுடன் வந்து அவனுக்கு அவள் என்றும் அவளுக்கு அவனென்றும் ஒரு சொந்தத்தை ஏற்படுத்திக்கொண்ட இந்த சிறிய காலவட்டத்தில் இன்றுதான் இப்படி ஒரு உணர்வு தோன்றியிருந்தது. இதுவரைநாளும் கோடைகால விடுமுறையில் நின்றமூர்த்தி நேற்றுத்தான் திரும்பவும் வேலைக்குப்போக தொடங்கியிருந்தான்.நேற்றிலிருந்துஅவனில்லாதபோது ஒரு தனிமையான உணர்வு துளிர்விடத்தொடங்கியிருந் தாலும் இன்றுதான் அவளை அது வாட்டுவதாக உணர் கிறாள்.சன்னல்திரையை விலக்கிக்கொண்டு வெளியே பார்த்தாள். மின்சாரக்கம்பியில் அவளைஒத்த குருவி தனியாகக் குந்தியிருந்தது.அது வானத்தைநோக்கி அண்ணார்ந்து பார்த்து தன் அலகுகளைத்திறந்து தலையை இரண்டுபக்கங்களும் ஆட்டிக்கொண்டிருந்தது. அது அலகுகளை திறந்து மூடும்போதெல்லாம் அதன் அலகுகளின் கீழேகழுத்துப்பருத்தும் சுருங்குவதுமாக இருந்தது.அவள் இந்த நிகழ்வுகளுடன் கரைந்து வினாவத்தொடங்கிவிட்டாள். "ஏய் குருவி நீ என்ன செய்கிறாய்?" நீயும் உன் காதலனை எண்ணி ஏங்கிப்பாடுகிறாயா? இல்லை வலுவிழந்து மீண்டும் தென்புவேண்டிசுவாசிக்கின்றாயா? நீ உனக்காகப்பாடாவிட் டாலும் நீ எனக்காகப்பாடு உன் ஓசையை நான் கேட்கவேண்டும்.என்று சன்னலை திறந்தாள். எக்காரணம் கொண்டும் தானில்லாவேளை சன்னலையோ அல்லது அறைக்கதவையோ திறந்து பொதுவான அந்தக்கட்டிடத்தில் சமயலறைக்கு செல்லக்கூடாதென மூர்த்தி கூறியது ஞாபகத்திற்கு வரவே சன்னலை மீண்டும் சாத்திக்கொண்டாள். வெளியே குந்தியிருந்த குருவிக்கேது கட்டுப்பாடு.அதுவும் சிறிதுநேரத்தில் பறந்துபோயிற்று. இப்போ மண்டலம் முழுக்க வானத்தால் நிறைந்திருப்பதும் ரெயில்பாதைகளைப்போல் தோன்றும் அந்த மின்சாரக்கம்பிக ளும்தான் தெரிந்தன. இன்று காற்றில்லைப்போலும் முகில்கள் நகராமல் அப்படியே நின்றன.எவ்வளவுநேரம்தான் இந்த ஆகாயவெளியை பார்த்துக்கொண்டிருக்கமுடியும். அதிலிருந்து விடுபட்டு மேசைமீது நோட்டமிட்டாள். அங்கிருந்த படக்கொப்பிகளிலும், பாட்டுக்கசட்டுகளிலும் N.மூர்த்தி என்று எழுதப்பட்டிருந்தன. N.மூர்த்தி, N.மூர்த்தி என்னவர், நீங்கள் அழகானவர், அன்பானவர், வயதுகூட 30 தான் உங்களுக்கு வேண்டாம் உந்தப்பழையபெயர். அப்படி என்றால் என்னபெயர் பொருத்தமாக இருக்கும் ? கருண்டகேசம்,கூரியமூக்கு, கொஞ்சம்கூட வண்டியில் லாத டெனிஸ்காரர்போல உருவத்தோடு ஒட்டியும் புயங்கள் உயர்ந்தும் கொண்ட உடம்பு. இவ்வளவு அழகான உங்களுக்கு வேண்டாம் உந்தப் பழையபெயர். மதனாப்பிரியன் என்று வைக்கலாமா? வேண்டாம் அது கூட பழசுபோல இருக்கு. அப்படி என்றால் மகரவரிசையில் மைக்கல்! ஓ! அச்சாப்பெயர்.

எல்லாக்கசட்டுகளிலுமிருந்த மூர்த்தி என்றபெயரை துப்பரவு செய்துவிட்டு மைக்கல் மதனா என இரண்டு பெயர்களையும் இணைத்து எழுதிக்கொண்டிருந்தாள். எழுதிய கசட்டுகள் அடுக்கப்பட்டுக்கொண்டிருந்தநேரம் ரெலிபோன்மணி அடித்தது.றிசீவரைத்தூக்கி "கலோ" என்றாள்.

மறுமுனையில் "நான் மூர்த்திமாமாபேசுகிறேன்."

"உந்த லொள்ளுத்தானே கூடாது என்னப்பா செய்யுறியள் இப்ப சாப்பாட்டு இடைவேளையோ?"

"அதேதான், பாண்கட்டையை கடித்தால் விழுங்கேலாதாம் அதுதான் எடுத்தனான் நீங்கள் என்ன செய்யுறியள்?. சாப்பிட்டாச்சா?

"நான் என்ன செய்யுறன் எண்டு வந்துபாருங்கோவன். என்னவரே நீங்கள் இனி மூர்த்தி இல்லை".

"அப்படி என்றால் மூர்த்திமாமாதானா?"

"அதுவுமல்ல. உங்களை நான் இனி மைக்கல் என்றுதான் கூப்பிடுவன்"

கதைத்துக்கொண்டு நின்றதில் இடைவேளை நேரம் கரைஞ்சுபோச்சு. இன்னும் மூன்றரை மணித்தியாலங்களில் அடியேன் உவ்விடம் ஆஜாராவேன். உங்களுக்கு என்னவாங்கிக்கொண்டு வாறது? சும்மாய் இருக்க சோம்பலாக இருந்தால் நேற்று வாங்கித்தந்த அந்தப்பொம்மைக்கு சட்டைதைச்சு போட்டுப்பாரப்பா..லொப் பமாக்கற்றில வாங்கின நிறையத்துண்டுகள் மேசைக்குக் கீழ கிடக்கிற பெட்டிக்குள்ள கிடக்குது. ரெலிபோன் முனைகளுக்கு கொடுத்த முத்தங்களுடன் தொடர்பு நீடிக்கவில்லை.மதனா றிசீவரை வைத்துவிட்டு பொம்மையை எடுத்து கட்டிலில் கிடத்தினாள்.சிறிதுநே ரம் அந்தப்பொம்மையை கண்கொட்டாமல் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள்.இந்தப்பொம்மை வினோதமானது இதனை கிடத்திவைத்தால் கண்களை மூடிக்கொள்ளும்.திரும்பவும் தூக்கி நிறுத்திவைத்தால் கண்களை விழித்துக்கொள்ளும்.

பொம்மையின்தூக்கம் அவளின் விருப்பமாக இருந்திருக்க வேண்டும். அப்படியே விட்டுவிட்டு அவளின் மைக்கல் கூறிய அந்தப்பெட்டியை இழுத்து துணிகளை எடுத்து ஒவ்வொன்றாகப் பார்த்தாள். ஒரு பறக்கும் புறாப்போட்ட துண்டு,பின்பொரு சிவப்புத்துண்டு, பிறகொரு வெள்ளையும் கறுப்பும் சேர்ந்த துண்டு,பின்பொரு சிவப்புத்துண்டில் வெள்ளை நிறத்தால் நாசிகளின் சின்னம் போடப்பட்டு குறுக்காக வெட்டப்பட்டு Avoid slogan of NAZY



படிப்பகம்

www.padippakam.com

என கீழே ஆங்கிலத்தில் அடிக்குறிப் பிடப்பட்டிருந்தது. இறுதியில் ஒரு பற்றிக் துண்டு, ஒரு பனையில் ஏற்றுக்காரன் குந்தியிருப்பதுபோல் அமைந்திருந்தது. மூலையில் Made in Srilanka என்று இருந்தது. இறுதியில் இருந்த பற்றிக் துண்டை திருப்பித்திருப்பிப் பார்த்தாள். கறுப்பும் பச்சையும் சேர்ந்த வர்ணங்களில் நேர்த்தியான பற்றிக் வேலைப்பாடுகளுடன் அழகாய் இருந்தது. படத்தைப்பார்த்ததும்அவள்அவனைக்கேட்டுக்கொள்வதும் அவன் கூறிக்கொள்வதுமான சம்பவம் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

" நாட்டிற்கு திரும்பிப்போனால் என்ன செய்வியள்."

அப்பற்ற பைலட் வேலைதான்"

அத்தோடு அவளின் ஞாபகக் கதவை மெல்லத்தட்டி எட்டிப்பார்த்தார்.

–சின்னமாமா–

"கடற்பிராந்தியத்தில தடைவிதித்திருக்கிறதால அவளின் சின்னமாமாவும் பைலட் வேலைதான் செய்யிறாராம்.கெட்டில்லாத உயரமான மரத்தில ஏறுவதென்ன லேசுப்பட்ட காரியம? அது துணிவுள்ளவன் மட்டும் செய்யிறவேலை."

இது சின்ன மாமாவின் கடிதவரிகள்.சின்னமாமா மதனாவின் அப்பாவின் குடும்பத்தில் கடைக்குட்டி.மதனாவைவிட 4வயதுதான் மூத்தவன்.நாட்டில் சோழகக்காற்று வீசும் காலத்தில் முற்றத்துத்தென்னைகள் தலைவிரித்தாடும் ஓசைகேட்டாலே வெருண்டுபோய் நிற்பான். மீனோடு விழுந்து எழும் குடும்பத்தில் பிறந்திருந்தும் மதனா நாட்டைவிட்டு வரும்வரை அவனுக்கு நீச்சல்வராது என்றால் பாருங்களேன். ஆனால் இன்றைய நிகழ்கால நிகழ்வுகளில் நிமிர்ந்து நிற்கும் தென்னையிலும் பனையிலும் .......நினைத்துப்பார்த்தால் காலங்களை காலம் மாற்றிக்கொண்டுவருவது தெரிந்தது. துணிகளை ஒருபக்கமாக குவித்துவிட்டு பொம்மையின் அளவுகளை எடுத்துக்கொண்டு முதலில் சிவப்புத்துண்டை வெட்டி கைகளுக்கு குஞ்சம்வைத்து முடிவில் பிறில்வைத்து தனக்குத்தெரிந்தவரை நுட்பங்களை எல்லாம்சேர்த்து ஓர் அழகான சட்டைதைத்தாள். பொம்மை சட்டையால் அழகுநிரம்பியிருந்தது. மதிப்பிடமுடியாக் கொள்ளை அழகு.சட்டைபோட்டுப்பார்த்தபோதுதான் அதற்கோர் பொட்டுவைத்துப் பார்க்கவேண்டும் போலிருந்தது. கறுப்பு,சிகப்பு, பச்சை, நீலம்......என்ன பொட்டு வைக்கலாம்? எடுத்தஎடுப்பிலேயே சிவப்புபொட்டு வைத்துப்பாத்தாள்.அழகில் பொம்மை ஜொலித்துக்கொண்டிருந்தது. இப்போ பொம்மையை கிடத்திவைத்துப்பார்க்க அவளுக்கு விருப்பமில்லை. அதனை மேசையில் இருத்திவைத்து கிட்டநின்றும் பின் கட்டில்வரை சென்று இருந்தும், அதன் அழகைப் பார்த்து ரசித்தாள்.பின் மேசை அருகே வந்து முதலில் குறித்துவைத்திருந்த அளவுகளின்படி இன்னொரு துண்டை எடுத்து வெட்டி இன்னொரு சட்டை தைத்துக் கொண்டிருந்தாள்.

அந்தவேளை கதவில் யாரோ தட்டும் ஓசைகேட்டது. மெல்லச்சென்று வில்லை பொருத்தப்பட்டிருந்த துவாரத்தினூடாக பார்த்தாள். மூர்த்தி! இல்லை! அவளின் மைக்கல் முகமெல்லாம் கறுப்பு அடையாளங்களுடன் நின்றான். மனுசன் முகம் முழுக்க இரத்தம்.

அப்பாவை......? இல்லை அந்த மனுசன் செய்திருக்காது. பெரியமாமாவை...? சனியனுகள்...தங்கட பிள்ளையள் என்றும் இல்லாமல் இதுவும் இத்தனைநாளும் ஆறப்போட்டிட்டு. அவன் எதுவும் பேசவில்லை. மேசையிலிருந்த துண்டுகளில் ஒன்றை எடுத்து முகத்தைப்பொத்திக் கொண்டு பாத்றூமுக்குள் சென்றான். கதவைச்சாத்திவிட்டு அவன்பின்னே மதனாவும் சென்றாள். சென்றவள் துணியை வாங்கி குளிர்நீரில் நனைத்து அவன்முகத்தை துடைத்து விட்டாள். மூக்கிலிருந்துதான் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. மீண்டும் தண்ணீரில் துண்டைநனைத்து நன்றாக அலம்பி பிழிந்துவிட்டு ஈரமான துண்டால் நன்றாக துடைத்துவிட்டாள். ஈரத்திற்கு இரத்தம் கட்டுப்பட்டிருக்கவேண்டும்....இரத்தம் கசிவுது தடைப்பட்டுவிட்டது. அவனது மூக்கு முன்போலில்லாது இப்போ உப்பிப்போய் இருந்தது.

"இப்பவாவது சொல்லுங்கோப்பா என்ன நடந்தது?

"அது ஒன்றுமில்லை.......ஸ்ரேசனில் நிண்டதுகள் என்னைப்பார்த்து கறுப்புப் பண்டி என்று சொல்ல பதிலுக்கு நானும் வெள்ளைப்பண்டி என்று சொல்ல......கொஞ்சம் சென்று, மூலையில உந்த முடக்கில நடந்தது. பக்கத்து வீட்டுக் கிழவன்வராட்டி விழுந்தபாட்டுக்கு இன்னம் கூடக்குறிசுட்டிருப்பாங்கள்."

கூறிக்கொண்டே அறைக்கு வந்தவன் சோபாவில் அமர்ந்து விட்டான். அவள் ஆதரவோடு அவன்தலையை கோதிக்கொண்டிருந்தாள்.

ஈரத்துண்டு அவன் கையிலிருப்பதைக்கண்டு அவனிடமிருந்து துணியை வாங்கி விரித்துப்பார்த்தாள். பறக்கும்புறாப்போட்டதுண்டு இரத்தத்திலும் ஈரத்திலும் நனைந்திருந்தது. சிகப்புச்சட்டை பொம்மையை அழகுபடுத்திக்கொண்டிருந்தது.

பனையும் ஏற்றுக்காரனும் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தார்கள். றேஸ்மொடல் மோட்டார்ச்சைக்கிள் படம் இன்னும் கதவில் ஒட்டிக்கொண்டிருந்தது.

பொம்மைக்கு இன்னுமொரு தைக்கப்பட்ட சட்டை தயாராகி கிடந்தது.

திடீரென அவன் என்ன நினைத்தானோ அவளின் கைகளைப்பிடித்து இழுத்து அவளை சோபாவில் இருத்தி அவள் மடியில் தலையை புதைத்துக்கொண்டான்.

முற்றும்

■



படிப்பகம்

www.padippakam.com

# குளிரும் போரும்........................ பூமி.


அந்தச்சிறுகடல் நீரால் நிரம்பிவழியும் காலமது.ஈழத்தில் நான் பிறந்துவளர்ந்த கிராமத்தின் மாரிகாலம்.

அந்தக்கிராமத்தில் நல்லையா என்றொருவர் இருந்தார். வேட்டைஆடுவதில் மிகுந்த திறமையும், அனுபவமும் உள்ளவர். அதனால் அவரை வெடிகார நல்லையா என ஊர் அழைத்துவந்தது.

இழுத்து இறுக்கிக்கட்டிய காற்சட்டையோடு பாய்ந்துவரும் வெள்ளத்தில் புரண்டுவிளையாடித்திரிந்த அந்தக்காலம் மிக அழகானதெனக்கு.

அந்தஊரின் அம்மன்கோவில் முன்னால் வெள்ளத்தால் தளதளத்துக்கொண்டிருக்கும் அச்சிறுகடலில் கறுப்புநிறச்சிறகையினங்கள் வந்துவிழுந்து குவிந்துபோய் நீரில் கிடக்கும்.

அந்தச்சிறகையினப்பறவைகள் எங்கள் நாட்டில் நிரந்தரமாக வாழ்பவையல்ல .அவை அயல்நாட்டுப்பறவைகள்.



வின்ரர்காலக்குளிரைத்தாங்கமுடியாது புலம்பெயர்ந்து வெப்பநாடுகளை நோக்கிவந்து குறுங்காலமொன்றில் தங்கி வாழ்ந்துவிட்டு தமது சொந்தநாடுகளில் காலநிலை சீரானதும் தமது சொந்த நாடுகளுக்கு மீண்டும் திரும்பி விடும் பறவைகள்.

அப்போதெல்லாம் அப்பறவைகளின் புலம்பெயர்வு பற்றி நான் அதிகம் அக்கறைப்பட்டதில்லை.ஆனால் அந்த விருந்தினப் பறவைகளை சுட்டுக்கொல்லுதல் இலங்கைச் சட்டத்தில் தடைசெய்யப்பட்டிருந்தமை எனக்குப்பிடித்த விடையமாக அன்றிருந்தது. அது ஒரு நல்லவிடையமும், அத்துடன் மகிழ்ச்சிக்குரியதும்கூட. வானத்தில் எப்போதும் நேர்கோடாகவும் சமாந்தரமாகவும் பறக்கும் பழக்கமுள்ள இப்பறவைகள் ஒவ்வொருவருட மாரிகாலத்திலும் அச்சிறுகடலுக்கு வந்துசேர்ந்துவிடும். தவறாது வரும் குளிர்போல அவையும் அச்சிறுகடலுக்கு வந்துவிடும்..

அம்மாரிகாலத்தில் ஒருநாள் 1960 களின் நடுப்பகுதிக்காலம்.

அச்சிறுகடலை நோக்கி தரையில் படுத்தபடி நுழுந்திச்செல்லும் நல்லையாவின் கையில் துவக்கு. ஓசைப்படாமல் புல்லோடு புல்லாக ...சேற்றோடு சேறாக... நுழுந்தி நுழுந்தி.....அச்சிறகைகளுக்கு குறிவைத்தபடி இரட்டைக்குழல் துப்பாக்கியோடு அவர் அணுஅணுவாக நகர்ந்துகொண்டிருக்கிறார். நல்லையாவின் துவக்குவிடையம் அறியாத பறவைகள் தம்பாட்டில் நீரில் விளையாடிக்கொண்டிருக்கும்..

அக்கடலோரக்கரைதோறும் எப்போதும் நிரம்பிக் கிடக்கும் ஆட்காட்டிக்குருவியின் சப்தத்தை எழவிடாது ஓசைப்படாமல் வெடிக்கார நல்லையாவின் துவக்கு நகர்ந்துகொண்டிருக்கிறது.

சரி....வெடிதைக்கக்கூடிய தூரத்தை அண்மித்தாயிற்று. அவர் வில்லை இழுத்து விடுகிறார்.

வெடிச்சத்தத்தில் சிறகையினங்கள் அலறியடித்து குவியலாக மேலே எழுகின்றன.

வெடிக்காரநல்லையாவின் அடுத்ததோட்டா வெடிப்பதற்குள் குறைவானத்தில் எழுந்த அப்பறவைகளை சுட்டுவீழ்த்தியபடி 10 15 தோட்டாச்சத்தங்கள்.

வெடிக்காரநல்லையா வெடிவந்த திசைநோக்கிப் பார்க்கிறார். அக்கடலின் அடுத்தகரையில் முகாமிட்டிருக்கும் ஆமிக்காரர்கள் அவர்கள்.

கறுப்புலோங்சும்,வெள்ளைரீசேட்டுமாக மீசையில்லாத வழித்தமுகத்தோடு அந்தப்பச்சைநிற றக்கில் அவர்கள் சிரித்தபடி துப்பாக்கியுடன் நின்றனர்.

வெடிக்காரநல்லையா அவர்களிடம் செல்கிறார். அந்த ஆமிக்கார இளைஞர்கள் சிரித்தபடி சிங்களம் கலந்த தமிழில் அவருடன் கதைத்துக்கொள்கின்றனர்.சுட்டுவீழ்த்திய அந்த நூற்றுக்கணக்கான பறவைகளை எல்லோரும்சேர்ந்து பொறுக்கி எடுத்துவந்து தமது றக்கில் போட்டுக்கொண்டு நல்லையாவிற்கும் 10 15 பறவைகளை கொடுத்துவிட்டு அந்த ஆமிக்கார றக் மறைந்துவிடுகின்றது.

அன்று நல்லையாவிடமும் துவக்கு.அந்தக்கால ஆமிக்காரரிடமும் துவக்கு.

ஆனால் ஆளை ஆள் சுட்டுக்கொண்டதில்லை. பயந்து ஒதுங்கினதில்லை.சிரிப்புக்கள் கைகோர்த்துக்கொண்ட காலம்.

லீவுநாட்களில் ஆமிக்காரர் வீடுசெல்லும்போது பினாட்டும், கருவாடும், மாம்பழமும் கட்டி வழியனுப்பிவைக்கும் குறையற்ற அந்தக் கிராமத்தவர்களுக்கென்று அன்னாசிப்பழமும்,பட்டபுறாட்,றம்புட்டான்,மங்குஸ்தான் பழவகை முடிச்சுகளோடு லீவுமுடித்துவரும் ஆமிக்காரர் சுமந்துவருவர்.



படிப்பகம்

www.padippakam.com

"இப்படியாக நாங்கள் அவர்களோடு வாழ்ந்தகாலம் ஒன்றும் உண்டு" என்று என்னைப்பேட்டிகாணவந்திருந்த அந்த டனிஸ் பாடசாலை மாணவர்களுக்கு சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

அடுத்தடுத்து வழமையான கேள்விகள்.

யுத்தம், பிரிவு, கவலை வெற்றி என்றெல்லாம் பதில்சொல்லிக்கொள்கிறேன்.

தொடர்ந்து அந்த தங்கமுடிக்காரி ஒரு கேள்வி கேட்கிறாள்.

"உலகமெலாம் பரந்திருக்க......நீ ஏன் டென்மார்கை தேர்ந்தெடுத்து வந்தாய்? என்பதுவே அக்கேள்வி.

"குளிருக்குப் பயந்து வாழமுடியாமல் எங்கள் நாட்டுக்கு புலம்பெயர்ந்து வரும் அந்த சிறகையினப் பறவைகளை "ஏன் நீங்கள் இலங்கைக்கு ஓடிவந்தீர்கள்? என்று நாம் கேட்டதில்லை" என்று பதில் சொல்கிறேன்.

அவளின் அடுத்தகேள்வி ........

அந்தச்சிறகையினங்கள் குளிர்காலம் முடிந்து தமதுநாட்டிற்கு திரும்புவது பற்றியதாக இருக்கலாம்.

நான் ஆர்வத்தோடு பதில் சொல்ல தயாராகிறேன்.

முற்றும்

---

# நடனம்

வை. சி. சிவநாதன்

இரண்டுமணிக்கெல்லாம் நின்றாகவேண்டும்.இரண்டு ஐந்தாகிவிட்டது.நான் அந்த மண்டபத்துள் நுளைந்து, அவசரஅவசரமாக ஜக்கற்றையும், கைகிளவ்ஸ், கழுத்துக்குக்கட்டும் துண்டு ஆகியவைகளை அதற்கான இடத்தில் கொழுவிவிட்டு சனக்கூட்டமான இடத்திற்கு நான்போக நேரம் இரண்டு பத்தாகிவிட்டது.

எல்லோருமே என்னைப்பார்ப்பதுபோல் ஒரு உணர்வு. கூச்சம்வேறு.என்சுபாவம் ஒருவாறாக அங்கிருந்த வெற்றுக்கதிரைஒன்றில் அமர்ந்துவிட்டேன். மயான அமைதி.மண்டபத்தின் ஓரமாக நிலத்தில் இரண்டு பெண்கள் பாடிக்கொண்டு நிற்கின்றனர். அவர்களைச்சுற்றி அரைவட்டவடிவாக முதல்வரிசைக் கதிரைகளும் மற்றவை மேசையுடன் கதிரைகளும் வரிசைப்படுத்தியிருந்தன.நான் உட்கார்ந்தது முன்வரிசைக்கதிரை.பாட்டுப்பாடும் ஒருவர் இளம்வயது, மற்றவர் வயது கொஞ்சம்போனவர்.வயதுபோனவர் சிறுபிள்ளைபோல் பாடவும் அபினயம் செய்ய மிக நன்றாக இருந்தது.

அவர் பாடிய பாடலில் எனக்கு விளங்கியவை.........

> சூரியன், அவனது கதிர்களால் என்னைத்தீண்டுகின்றான்.
> எனக்கும் ஒருவிதமான உணர்வு,
> ஆண்களுக்கும் அதேவிதமான உணர்வு.
> புற்தரைகளில் நான் நடக்கிறேன்.
> அவனும் நடக்கின்றான்.
> அவன் என்னை அணைக்கின்றான்.
> பதிலுக்கு நானும் அவனை அவனது
> உணர்வுகளுடன் அணைக்கின்றேன்........
> அவனுக்கு வேலைத்தலத்தில் கூடுதல் சம்பளம்,
> அவளுக்கு குறையச்சம்பளம்.

என அப்பாடலை சுருக்கமாக கூறிவிடலாம்.அதன் உணர்வு,ஒலி, அவளின் அசைவுகள் காட்டிய வெளிப்பாடு இவைகளை.........இடைமறித்தாற்போல் மூண்ஸ் கியக்கோ என்பவர் மேசையில் இருந்த கிளாசில் தனதுபேனாவினால் தட்டி ஒலிஎழுப்பிவிட்டு ஏதோ சொல்வதற்கு தயாரானார். இளம்சிகப்பு சில்க் ஆடை அணிந்த 45 வயது மதிக்கத்தக்க ஊலாபோஸ் என்ற பெண் ஒருவர் சில போட்டோக்கொப்பி பிரதிகளை எல்லோருக்கும் கொடுத்து முடியும்வரை மூண்ஸ் பொறுமையாக சிரித்தபடி நின்றார்.ஒருதரம் செருமிவிட்டு அவர் கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

[illegible] டென்மார்க் ஓவியக் கண்காட்சி நடாத்தும் சங்கத்தினால் தேர்வுசெய்யப்பட்டவர் என்றும் மேலும் சில தகவல்களைக்கூறி அவரது இந்த ஓவியக்கண்காட்சிக்கு வந்திருந்தவர்களுக்கு நன்றிகூறி மேசையில் இருக்கும் உணவு வகைகள் இலவசம் எனவும் குடிவகைகள் கன்ரீனில் காசுக்கு கிடைக்கும் எனவும் கூறிமுடித்தார்.

ஊலா போஸ் பார்ப்பதற்கு 30 வயதுபோல் காட்சியளித்தாள். அவள் என்னைப்பார்ப்பதுபோல் எனக்கு ஒருவித பிரமை. நான் அவள் கொடுத்த பிரதியை படிக்கத்தொடங்கினேன். ஓவியங்களின் எண்வரிசையில் அதற்கான பெயர்கள், விலைகள் காணப்பட்டன.அந்த மண்டபத்தின் கட்டட அமைப்பில் தாழ்வாரத்திலிருந்து அத்திவாரம்வரை வெளிச்சம் வருவதற்காக கண்ணாடி யன்னல் அமைத்திருந்தனர். அதனூடாக வெளியே பார்க்கவேண்டும் போல் எனக்கு ஒரு உணர்வு தலைநிமிர்த்தவும் ஒரு சென்ற் வாசனையுடன் வணக்கம் கூறிக்கொண்டது ஒரு பெண்குரல்.நிமிர்த்திய தலையை திரும்பவும் பக்கவாட்டுக்கு திருப்பிக்கொண்டேன்.

அது வேறுயாருமல்ல ஊலாதான்.

நான் அக்கண்காட்சிக்கு வந்தது அவளுக்கு சந்தோசம். என முதலில் உபசாரத்திற்கு கூறிக்கொண்டாள். நானும் பதிலுக்கு நன்றி கூறிக்கொண்டேன்.அவர் தொடர்ந்து என்னுடன் பேசவேண்டும் என்ற ஆர்வமிகுதியால் பக்கத்தில் இருந்த கதிரையில் அமரலாமா என்று முத்தாய்ப்பு வைத்தாள்.

நான்" தாராளமாக" என்றேன்......உட்கார்ந்தவள்........

"கேட்பதற்காக கவலைப்படாதே......உங்கள்....அதுகிடக்கட்டும் நீ ஸ்ரீலங்கன் தமிழரா?" என்றாள். "ஆம்" என்று பதில் இறுக்கினேன்.கண்களை அசைத்துவிட்டு ...உங்களுடைய பெண்கள் நெற்றியில் பொட்டுப்போடுவது ....சாதியின் அடையாளமாகவா?" என்றாள்.

இல்லை....என்று கூறவேண்டும்போல் என்னுள் ஒரு உணர்வு.

ஏன் அப்படி எனக்குத்தோன்றுகின்றது? என மறுபடியும் என்னைக்கேட்டுக்கொண்டேன். அவளைப்பார்த்து ஒருமுறை அசடுவழிய சிரித்துக்கொண்டேன். பதிலுக்கு அவளும் சிரித்துக்கொண்டாள்.

"உனது ஓவியங்கள் மிகவும் நன்றாக உள்ளன.சில கூடாதவைகள் என்று கூறமுடியாது" என்று அவளை திசைதிருப்ப அவளினுடைய தாய்மொழியான டெனிஸ் ஓவியங்களில் வண்ணங்களின் அளவு, தேர்ச்சி, பாரம், சமனாக உள்ளவைகள் தொடர்பாக சிறிது அவளுடன் உரையாடினேன்.






படிப்பகம்

www.padippakam.com

முடிவில் ஆரம்பித்த இடத்தில் ஊலா நங்கூரம் பாச்சிவிட்டாள்.

"நான் ஊரில் சாதிபார்த்ததும் இல்லை, கேட்டதுமில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்யும் குடும்பங்களில் பிறக்கிறோம்.ஆனால் எல்லோர் குடும்பங்களிலும் உள்ளபெண்கள் செற்றியில் பொட்டு வைக்கின்றனர்.

தமிழர்களின் ஆரம்பகாலங்களில் அல்லது தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் உனக்குத்தெரியுமா இந்தியாவில் திராவிடர் என்று ஒருமக்கள்பிரிவினர் இருந்தது. அவர்களை ஆரியர் என்ற மக்கள்பிரிவினர் இரும்பின் உபயோகத்துடன் அடக்கியதும், அவர்கள் திராவிடர்களை தமது சொந்தக்கலாச்சாரத்திற்காக பலவழிகளில் அடக்கியதும்" என்றேன்.

அவள் "ஆம் ஆம்" என்று தலையை மிக விரைவாக ஆட்டிவிட்டு சிரித்தாள்."ஏன் சிரிக்கிறாய்" என்று விறுக்கென்று கேட்டு விட்டேன். "இல்லை ...நான் உலகத்திலுள்ள பலமக்கட்பிரிவினரின் நாட்டார் கதைகள், பாடல்கள், இலக்கியங்கள் பற்றி படித்திருக்கிறேன்.தமிழ் அல்லது இந்துமதம்; இந்தியாபோன்ற நாடுகளிலிருந்து நாட்டார் இலக்கியங்கள் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை.கிடைத்தவைகள் தனிய இலக்கியங்கள்.இவைகளில் மேட்டுக்குடியினரின் பழக்கவழக்கங்கள்தான்;முழுமக்கள் பிரிவின் கலாச்சாரமாகவும்,இலக்கியமாகவும் காட்டப்படுகின்றது" என்றாள்.

அதுதவிர சிந்து சமவெளி ஆய்வுகள்; அதனை முழுமையான ஆய்வுக்குஉட்படுத்த பொருளாதாரக்காரணம் காட்டி.......இப்படிஎனக்கு புதிதான பல புதியதகவல்களை ஊலா கூறிமுடித்தாள்.

"அப்படியென்றால் நான் கூறப்போகும் விசயம் உனக்கு கூறும் அர்த்தத்தில் விளங்கிக்கொள்ளக்கூடிய அடிப்படை அறிவு இருப்பதாக கருதுகின்றேன். எனவே எனது கருத்தை கூறுகின்றேன்"

ஊலா மீண்டும் சிரித்தாள். கதிரையில் சரியாக இருப்பதுபோல் மீண்டும் ஒரு அசைவுகாட்டி தன்னை கேட்பதற்கு தயார்ப்படுத்திக்கொண்டாள். "நான் குழந்தையாக இருக்கும்போது எனது அம்மா, எனது தகப்பனாரின் தாயார், இப்படி நான் காணும் பெண்கள் எல்லோரும் நெற்றியில் பொட்டு வைத்திருந்தனர்.இப்போது என் மனைவியும் பொட்டுவைத்திருக்கின்றாள்.

நான் கருதுகின்றேன் இது தொடர்ச்சியாக இருந்துவரும் ....." இடைமறித்த மூன்ஸ் "மேசையில் யாரும் உணவு எடுக்கவில்லை போய் எடுங்கள்." இரண்டு பியர்க்கிளாசுகளை இருவருக்கும் நீட்டினார்."நன்றி" கூறி அடுத்த பியர் எனதுமுறை" எனக்கூறினேன்.மூன்ஸ் தனதுபாட்டில் தலையாட்டியபடியே வேறுயாரையோ தேடிச் சென்றுகொண்டிருந்தார். ஊலா விடுவதாக இல்லை."தொடர்ந்து கூறு" என்றாள்.

"பொட்டுவைத்திருத்தல் தொடர்ச்சியாக இருந்துவரும் பழக்கம்.இதன் உண்மையான அர்த்தம் எனக்குத்தெரியாது.

நீ படித்த ஆரியரின் பழக்கவழக்கங்களால் கறைபடிந்த இலக்கியங்களும் என்ன கூறுகின்றனஎன்பது எங்களில் பலபேருக்கு தெரியாது.இதை கலாச்சாரம் என்று கூறுவது பொருத்தம்" என்றேன்.

"அப்படி என்றால் தமிழ் கலாச்சாரமே ஆரியரின் வருகையால் கறைபடிந்துவிட்டதா?" என்றாள்.

"ஊலா நீங்கள் ஏன் நாட்டார் இலக்கியங்களை ஆர்வத்துடன் படிக்கின்றீர்கள்" என்றேன்.

" நான் நாட்டார் இலக்கியங்கள் அதாவது பிற்படுத்தப்பட்ட மக்கள்–ஒடுக்கப்பட்டவர்கள் எனப்படுபவர்கள், மதரீதியாக சிறுபான்மையினர், விவசாயிகள், மீனவர்கள் போன்றவர்கள் தமது எதிர்ப்புணர்வுகளை எந்தெந்த வகைகளில் வெளிப்படுத்துகின்றனர் என்பதை அறியவே" என்றாள்.

"அத்துடன் எனது கணவர் ஒரு மானிடவியலாளர் அவருடன் நானும் ........

"ஊலா நீங்கள் படித்த இலக்கியங்களில் காணவில்லையா?" என்றேன்."நீ கதைப்பது உங்கள் நாட்டு இலக்கியமா? அதில் மேல்நிலையில் உள்ளவர்கள் தங்களுக்கான மானுடத்தை கட்டமைத்துள்ளனர்; அவர்களின் இலக்கியத்தில்" என்றார்.

இன்னொரு பாடகன் பாடத்தொடங்கினான் ஒரு கிற்றாருடன். நாங்கள் இருவரும் சாப்பாடு எடுத்துவந்து மேசையில் அமர்கின்றோம்.

பாடல்:

"ஒருமந்திரி வெளிநாட்டமைச்சுக்கு பொறுப்பாக இருந்தான். அவன் குப்பைத்தொட்டியில் குப்பைகளுக்குப் பதிலாக விண்ணப்பங்களை போட்டான்.–அதனால்
அவனுக்கு முகம்தெரியாத ஒருவன் பாதிக்கப்பட்டான்."
என்று மிக சோகமாக பாடிக்கொண்டிருந்தான்

எனது கண்கள் சுவர்களில் மாட்டப்பட்ட படங்களை பார்க்கின்றன.

சுற்றாடல்; அசுத்தத்தால் நடக்கும் பாதிப்புக்களையும்,யுத்தங்களையும், வெளிப்படுத்திக்கொண்டிருந்தன ஊலாவின் படங்கள்.

நான் ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமை இரண்டு மணிக்கு அந்த மண்டபத்திற்கு வருவது என்பது எனது கலாச்சாரமாகிவிட்டது.

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# வைராக்கியம்

**வேலணையூர் பொன்னண்ணா**



அன்று அது ஒரு மார்கழிமாத சனிக்கிழமை உலகத்தை விழிக்கவைக்கும் கதிரவனும்கூட துயில் கலைக்கவில்லை. வெளியில் பனிமழையில் பூமாதேவி மூடிமறைந்திருந்தாள்.பரிஸ்மாநகரின் உயர்ந்த கட்டடங்கள் எல்லாவற்றிலும் இடைஇடையே சிறுசிறு மின்மினிகளாக ஒளிகொடுத்துக்கொண்டிருந்தன.எனது மணிக்கூட்டின் அலாரம் மட்டும் எனக்காக விழித்திருந்ததுபோல் சரியாக நாலுமணி முப்பதுநிமிடங்களுக்கு தன் கடமையை செய்தது. அலாரத்தை நிறுத்திவிட்டு உடலை மறுபுறம் திருப்பி இரண்டுபுறமும் உடல் அலுப்பை முறித்துவிட்டு மீண்டும் போர்வையால் இழுத்துமூடி அதற்குள் மறைந்து கொண்டேன், இன்னும் 10 நிமிடம் தூங்கலாமென்று. ஆனால் போர்வை மட்டும் உடலைமறைக்க இமைகள் விழிகளை மறைத்தனவேயன்றி என் உள்ளம்மட்டும் தூங்கவில்லை. எனது அன்றைய றெஸ்ரோறன்ட் வேலைகளை எண்ணியபடி இளையோடி நின்றன.மீண்டும் அலாரம் அடிக்க துடித்தெழுந்து இராணுவப் பயிற்சிநிலைய வீரர்களைப்போல் அதிரடிசெயற்பாட்டில் இறங்கி காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வேலைக்குரிய உடைகளையும் மாட்டிக்கொண்டு 5 மணிக்கு அறையைவிட்டு இறங்கினேன்.ஆறுமணிக்கு நான் றெஸ்ரோறன்டில் நிற்கவேண்டும்.5.30 றெயின் எடுக்கவேண்டும். இதற்குள் இரண்டுகிலோமீற்றர்தூரம் அந்தப்பனிக்கட்டியில் நடந்து செல்லவேண்டும் என்பது கட்டாயநிர்ப்பந்தமானது.நானும் மாடிப்படிகளை ஓடிஓடிக்கடந்து வீதியிலும் பனிச்சறுக்கலை ஓடிஓடி நடந்து குறிப்பிட்டநேரத்தில் றெயினைப்பிடித்துவிடுவேன். அன்று 10 நிமிடங்கள் பிந்திஎழுந்ததால் எனக்கு வழமையைவிட அவசரம். மின்னல்வேகத்தில் ஓடிச்சென்று குறிப்பிட்டநேரத்தில் றெயினைப்பிடித்துக்கொண்டேன். ஆனால் றெயினுக்குள் இருந்தவர்கள் திரும்பிப் பார்க்குமளவுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு விடவேண்டிய நிலையாயிற்று. றெஸ்ரோறன்ட் சென்று வேலையை தொடங்கியபோதுதான் ஞாபகம் வந்தது; வழமைபோல் அறையில் என்னுடன் இருக்கும் நண்பன் ரவி விழிப்பதற்கேற்ப அலாரத்தை நான் மாற்றிவைக்காமல் வந்துவிட்டேனென்று. ரவி இரவுவேலையும் செய்வதால் அவன் வேலைக்கு செல்வது பகல் 11 மணிக்குத்தான்.அதனால் நான்விழித்து வேலைக்குச்செல்லும்போது அவனுக்காக நேரம் செற்பண்ணிவைத்துவிட்டுப்போவது வழக்கம்.இன்று எனது அவசரத்தில் அதை மறந்துவிட்டேன். அவனுக்கு வேலைக்குப் போக உதவும் நானும், கடிகாரமும் இன்று அவனுக்கு உதவிக்கு இல்லை.அவன் தனது இரவுவேலை அலுப்பில் தூங்கிவிடுவானோ என்ற கவலை ஏற்பட்டது.பரீஸ் ரெஸ்ரோரன்ட் வேலைக்காரர்கள் ஒருநாளைக்கு வேலைக்கு போகாவிட்டால் அன்றைய வருமானம் அம்போதான்.எனது தவறால் அவனுக்கு நட்டம் ஏற்பட்டுவிடுமோ? என்ற கவலையில் எனது வேலையில் ஈடுபட்டேன்.

அன்று சனிக்கிழமை என்பதால் எனக்கு வழமையைவிட வேலை அதிகம். வெள்ளி இரவும் சனியும் என்றால் பிரஞ்சு மக்களுக்கு றெஸ்ரோறன்ட்தான் தஞ்சம். வீடுகளுக்கு அவர்கள் செல்வதே இரவு 2 மணிக்குத்தான்.தங்கள் விடுமுறைநாட்களை றெஸ்ரோறன்ட்களில் உண்டுகுடித்து மகிழ்வதும் நண்பர்களுடன் பேசிமகிழ்வதுமே அவர்களது வழமை. அதனால் பலகடமைகள் மற்றைய தினங்களைவிட கூடவாக இருக்கும்.

வேலை செய்து முடித்துவிட்டு சரியாக மதியம் 1மணிக்கு



படிப்பகம்

www.padippakam.com

அறைக்கு வந்துசேர்ந்தேன். அறைக்கதவைத்திறந்ததும் எனக்கு "டிக்" என்றது ரவி படுக்கையில் குப்புறக்கிடந்தவண்ணம் இருந்தான்.என்தவறால் அவன் இன்று வேலைக்கு போகவில்லை என மனம் வேதனைப்பட்டது. அருகில் சென்று "ரவி...ரவி" என்றேன்."என்னடா வேலைக்குப்போகவில்லையா...? உடம்புக்கு ஏதும் சுகமில்லையா? என்ன செய்யுதடா..? "என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனேன். அவன் எந்தப்பதிலும் கூறாமல் திரும்பி மறுபுறமாகப்படுத்தான். "நான் என்னடா செய்ய இன்றைக்கு நானும் எழும்பச்சுணங்கிவிட்டது. அதனால் அவசரத்தில் அலாரம்வைக்க மறந்துபோனேன். அதனால கோபமா..?" என்றுகேட்டபடி அவனருகில்போய் அவனைப்பிடித்து புரட்டினேன். அப்போதுதான் அவன் தனது தலையணைக்குள்ளிருந்து ஒரு கடிதத்தைதூக்கி தந்தான்; கலங்கிய கண்களுடன்.

"நான் நேரத்திற்கு எழும்பி வேலைக்குப்புறப்படும்போதுதான் தபாற்காரன் கடிதத்தை கொண்டுவந்து தந்தான். நான் உடைத்துப்பார்த்தபோதுஅழுகையும் மனவேதனையும் ஏற்பட்டதோடு நான் ஏன் உழைக்கவேண்டும்? யாருக்காக உழைக்கவேண்டும்? இத்தனை கஸ்ட்டப்பட்டு உழைத்து எந்தக்கடமையை செய்யமுடியும்? தங்கையின் வாழ்வுக்காகவே நான் காணிவிற்று வெளிநாடுவந்தேன். இப்போ அந்தத்தங்கையுமில்லை, அம்மாவுமில்லை. இருந்த ஒருஉறவு அப்பாமட்டும்தான் என்று அவரையாவது கூப்பிட்டு இங்குவைத்து பராமரித்து என்கடமையை செய்யலாமென்று கஸ்டப்பட்டு உழைத்தேன்.இப்ப அவரும் ஒரு வைராக்கிய முடிவெடுத்து கடிதமெழுதியிருக்கிறார்" என்று கூறியபடி கடிதத்தைத் தந்தான்.நானும் விரித்துப்படித்தேன்.

அன்பின் அருமைமகனே ரவி!

இக்கடிதத்தைக்கண்டு கவலைப்படக்கூடாது.என்முடிவை வரவேற்று வாழ்த்துக்கூறி பதில்போடவேண்டும். உனது கடிதமும் பணமும் கொழும்பிலிருந்த வந்த தனமண்ணர் மூலமாகக்கிடைத்தது. படித்தேன். உன் மனஉணர்வையும் கடமையில்கொண்ட நாட்டமும் அதில் தெரிந்தது. அதில் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு உடன் கொழும்பு வரும்படியும் பிரான்சுக்கு வருவதற்கு ஏற்ற ஒழுங்குகள்செய்யவேண்டும் என்னும் ஒருவேண்டுதல் கடிதம் எழுதியிருந்தாய்.

அக்கடிதத்தை பார்த்தபின் நன்குசிந்தித்து உன்மனநிலையையும் சிந்தித்து இறுதியில் என்மனதில் ஒரு வைராக்கியத்துடன் இரவு 12 மணிக்கு கைவிளக்கில் இந்தக்கடிதத்தை எழுதுகின்றேன். ஆறுதலாகவும் அமைதியாகவும் இதைப்படித்துப்பார். உலகத்தில் அகதிகள் பிறப்பதில்லை.ஆனால் அவர்களை உலகை ஆளும் ஆட்சியாளர்களே உருவாக்குகின்றார்கள். ஓர் அரசின் அடக்குமுறைச்செயலால் இன்று நீ வெளிநாட்டிலும், நான் எனது தாய்மண்ணிலும் அகதியானோம்.இந்தமண்பறிப்பு மிருகச்செயலால்தான் நானும் என்மனைவியையும் மகளையும் பறிகொடுத்தும் உன்னைப்பிரிந்தும் அனாதையானேன்.இந்தச்சூழ்நிலையில் நம்குடும்பம் மட்டுமல்ல எத்தனையோ பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று சும்பிட்ட கோயிலின்றி, குடியிருந்த வீடின்றி, உற்றார் உறவினரின்றி அகதியாக ஊருக்கு ஊர், நாட்டுக்குநாடு தடுமாறி அகதிமுகாம்களிலும் அடுத்தவன் கோடிகளிலும் அகதியாகி உள்ளன.

இந்தநிலையில் இன்று இளைஞர்கள் காட்டிலும், மழையிலும், வெய்யிலிலும், தம்மினம் இழந்தமண்ணை மீட்பதற்காக பாடுபடுகின்றார்கள்.

இந்தநிலையில் நீ என்னை பிரான்சுக்கு வரும்படி எழுதியிருக்கிறாய். எனக்கு இது ஒரு வேடிக்கைப்பயணம் போல் தெரிகிறது. நாடெரியும்போது பிடில் வாசித்த மன்னனாய் நான் வாழ விரும்பவில்லை. இதை குண்டடிபட்டிறந்த உன் அம்மா,தங்கையின் ஆத்மாக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது..என்பதே என்முடிவு.நீ மட்டும்தான் எனதுபிள்ளை என்று எழுதியிருப்பது மாபெரும் தவறு. இந்தப்பத்து ஆண்டுகளாய் எனக்குப் பலவழிகளிலும் உதவிவரும் ஆயிரம்பிள்ளைகள் இங்கு உள்ளார்கள்.நானும் அவர்களுக்கு உதவியாக இங்கு இருக்கவிரும்புகின்றேன்.

நீ எனக்கு எதுவும் அனுப்பவேண்டாம். நாட்டுக்கு உதவவிரும்பினால் உதவு.இதைவிட எதையும் எழுத நான் விரும்பவில்லை.நீயும் உனது தங்கையும் செய்யமுடியாமற்போன ஒரு மாபெரும் கடமைக்காக என்னை நான் இணைத்துக்கொண்டேன் என நீ பெருமைகொள்.

அப்பா இந்தவயதில் என்னசெய்வார் என்று உன் மனம்கேட்டால் வைராக்கியமும் மனத்துணிவும்கொண்ட ஒரு மனிதனுக்கு வயது ஒரு தடைஇல்லை என்ற வாக்கியத்தை நினைவுபடுத்திக்கொள்.

அன்புடன்

அப்பா

என்று எழுதியிருந்த கடிதத்தை வாசித்து முடித்துவிட்டு கடிதத்தைப்பார்த்தபோது கடிதமும் என்கண்ணீரால் நனைந்திருந்தது."ரவி டேய்! உன் அப்பா எப்போதும் மற்றவர்கட்கு பாடம்புகட்டும் மனிதனாகிவிட்டார். இங்கு நாங்கள் கரண்ட் அடுப்பு நெருப்பில் தினம்தினம் எரிவதைவிட அவர் போர்நெருப்பில் எரிந்தாலும் பெருமையே." என்று கூறிக்கொண்டு குசினியைத்தேடிச்செல்கிறேன்; அவனுக்கு தேனீர் தயாரித்துக்கொடுப்பதற்காக.

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# உப்பு

.................................பாரதிபாலன்



வின்ரர்காலம். வேளைக்கே இருட்டிவிட்டது.சேகர் வழமைபோல தொழிற்சாலை வேலையைமுடித்து ரயிலேறி தனது நகரத்திலிறங்கி பஸ்பிடித்து வீட்டை நெருங்க இரவு 8 மணியை எட்டிவிட்டது. அந்த தொடர்மாடிக்கட்டடத்தில் 2 வது அடுக்குத்தொடரின் இடதுபக்கம் அவனது வீடு. கதவில் எஸ். முத்தையா என்றே பொறிக்கப்பட்டுள்ள அவனது பெயர் தந்தை வடிவில் இன்றும் அவனை வரவேற்கிறது. ஊரில் வீட்டுமுற்றத்தில் அமைந்திருந்த சுருட்டுத்தொழிற்சாலையையும் அதற்குள் அமர்ந்தபடி சுருட்டுச்சுற்றும் பத்துப்பன்னிரண்டு தொழிலாளர்களையும், கோடா அவிக்கும் மணத்தையும் சுமந்து முத்தையா முதலாளி ஆகிநின்ற தந்தை மூன்றுவருடத்திற்குமுன்பு குண்டடிபட்டு இறந்துபோனார் என்று டென்மார்க்கிற்கு வந்த தகவலை எப்படி நம்புவது. இந்தப்பெயர்ப்பலகையில் புகையிலை மணமாகவே வீசிக்கொண்டிருக்கிறாரே முத்தையா.

சேகர் இன்றும் அந்தத்தரிசனத்துடனே கதவைத்திறந்து சுவிச்சைத் தொடுகிறான். வெள்ளம்போல வெளிச்சம் பாய கீழே இறைத்துக்கிடந்த பத்திரிகைகள், கடிதங்களை எடுத்து சோபாவில் எறிகிறான்.குளிர்நாட்டின் கவசங்களை களைந்து அதற்குரிய இடத்தில் மாட்டுகிறான்.குளியலறைக்குள் நுழைந்தவன் புத்துணர்வுபெற்று வெளியேறி படுக்கையறை விளக்கேற்றி ஜன்னல்கரையோரமுள்ள டப்பாவைத்திறந்து திருநீற்றை தொட்டுப்பூசி மூலைச்சுவரில் ஒட்டியிருந்த பிள்ளையார் படத்தின்முன் தோப்புக்கரணம் போடுகின்றான்.



படிப்பகம்

www.padippakam.com

குசினிக்குப்போய் தேனீர் தயாரித்து எடுத்துவந்து சோபாவில் அமர்ந்து பருகியபடியே அன்று வந்த ஊர்க் கடிதம் யாருடையதாக இருக்கும் என்ற சிந்தனையில் பார்வையிடுகின்றான்.

"பாஸ்கரன்" –

யாரிவன்? என்றகேள்விக்கு நேரம் விட்டுவைக்காமல் முகவரியே பதில்சொல்லிவிடுகிறது.

பாஸ்கரன், சேகரின் பால்ய நண்பன். உடல் புல்லரித்தது. நீண்டகாலத்தின்பின் பழையசம்பவங்கள் பசுமையைத் தூக்கிநிறுத்தியது.

பாஸ்கரன் – மாட்டுவண்டில் தம்பரின் ஒரேமகன்.

சிறுவயதிலிருந்தே இருவரும் ஒன்றாகக் கல்வி கற்றவர்கள்.சேகரைவிட படிப்பில் நல்ல கட்டி.இருவரும்இணை பிரியாத நண்பர்கள்.பள்ளிக்கூடம்விட்டு வரும்போது பறுவதம் ஆச்சியின் அடிவளவின் பிய்ந்த வேலிக்குள்ளால் நுழைந்து பாண்டிமாங்காய் பிடுங்கி குத்தித்தின்பதில் சுவைகண்டவர்கள். தனது வீட்டிலிருந்து 5,6 உப்புக்கல்லை சிறிய மாட்டுத்தாள் கடதாசியில் சுற்றி காற்சட்டைப்பொக்கற்றுக்குள் வைத்தபடி வருவான் பாஸ்கரன். இருவரதும் மாங்காய் விருந்து பிரமாதமாக நடக்கும். இருவரும் சிலவேளை களிமண்ணில் உருவங்கள் செய்து விளையாடுவார்கள்.

ஒருநாள் அந்த ஊரின் குளத்தடியில் இருவரும் களிமண்தோண்டி கையில் உருட்டிக்கொண்டு இருக்கும் போது அந்த மண்றோட்டில் மாட்டுவண்டில் வந்தது.கோபத்துடன் குதித்து இறங்கிவந்தார் தம்பர். "வெளிச்சாதிகள் வந்துகொல்லைக்கு இருக்கிற குளத்தங்கரையில கைவைச்சு பிணையிறியளே"என்று கோபத்துடன் அவர்களை நெருங்க, சேகர் பயந்து ஓடினான் "நட கொப்பரிட்ட பிறகுவாறன்" என்றவரிடம் பாஸ்கரன் முறையாக மாட்டிக்கொண்டான்.கையில் இருந்த துவரம்தடி 4,5 தடவை மகனின் முதுகை பதம்பார்த்தது. குளறிஅழுதபடி தந்தையுடன் மாட்டுவண்டிலில் போகும் பாஸ்கரனை மரமறைவிலிருந்து பரிதாபமாகப்பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு தனது வீட்டுக்கு ஓடி நல்லபிள்ளைத்தனமாக நின்றான் சேகர்.

இரவுவரைக்கும் பயந்தபடி இருந்தான். நல்லவேளை தம்பர் அவன்வீட்டை வரவே இல்லை.

சேகரின் தந்தை முத்தையாவும் பாஸ்கரனின் தந்தை தம்பரும் தூரத்து உறவினர்.இருவரும் நண்பர்கள். இருவரும் ஓய்வான இரவுநேரங்களில் அரசியல் பேசுவது வேடிக்கையாக இருக்கும். 50 க்கு 50 என்று தொடங்கி ஜி.ஜி. பொன்னம்பலம்பலத்தின் வீரப்பிரதாபங்களை எடுத்து முழக்குவார் முத்தையா.

"ஈழத்துக்காந்தி தந்தை செல்வாவின் கொள்கையே தமிழர் சுபீட்சத்திற்கு வழி" என்பார் தம்பர்.

முத்தையா விடுவாரா "மாட்டுக்கு இரக்கமில்லாமல் துவரங்கட்டையாலை அடிக்கிற உனக்கேன் காந்திக் கொள்கை.

"சிங்கள நாட்டுக்கு சுத்துப்பெட்டி ஏத்துறதாலை இப்பிடி எல்லாம் கதைக்கிறாய். 58 கலவரம்போலை ஏதும் வந்தா எல்லாம் தெரியும்" என்றுவிட்டு கொட்டாவி விட்டபடி வண்டிலைப் பூட்டுவார் தம்பர்.

சேகரும் பாஸ்கரனும் விஞ்ஞான வகுப்பில் பயின்று கொண்டு இருந்தார்கள்.உள்ளூர்த்தேர்தல் சூடுபிடிக்கத்தொடங்கிய நேரமது.தங்கள் விஞ்ஞானவகுப்பில் ஆவர்த்தன அட்டவணையை நினைவில் இருத்த பாஸ்கரன் நீண்டவசனம் ஒன்று கொண்டுவந்தான். அந்த வசனத்தில் பிழை உண்டு என்பது பற்றியோ, கட்சித்தலைவர் ஒருவரை பாதிக்கும் விடையம் அது என்பது பற்றியோ அந்த மாணவர்கள் சிந்திக்கவே இல்லை. பாடமாக்கியேவிட்டார்கள்.

பொன்னர்(பொன்) பிளான் (பிளாட்டினம்) வெறும் (வெள்ளி) பாதகச்(பாதரசம்) செயல் (செம்பு) ஐயா (ஐதரசன்)ஈழத் (ஈயம்) தமிழர் (தகரம்) இலங்கை(இரும்பு) நாட்டில்(நாகம்) அல்லலுறும்(அலுமினியம்) மக்கள் (மகனீசியம்) சோகக்(சோடியம்) கண்ணீர்(கல்சியம்) பொழிந்தனர்(பொட்டாசியம்)

தேர்தல்காலம் அந்த மாணவர்களின் விஞ்ஞான அறிவை வளர்த்தேவிட்டது.

சேகர் இந்த வசனத்தை வீட்டில் உரத்துப்படித்தான்"அறிவு கெட்டதுகளோடை சேர்ந்து உன்ர பொடியனுக்கும் புத்தி பிசகிப்போச்சு" என தன் தாயைக் கோபித்த தந்தையை நினைத்து தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

ஊரில் தேர்தல் கூட்டங்கள். ஊரின் அமைதி கறிச்சந்தை நாய்கள்போல் ஆகியது. முத்தையாவும் தம்பரும் இருதுருவங்கள் ஆகினர். தேர்தல் முடிவுகள் வெளியானபோது முத்தையா துள்ளிக்குதித்தார். தானும் பிரத்தியேகமாக செலவுசெய்து வெற்றி ஊர்வலத்தை பிரமாதமாகவே கொண்டாடினார்.முக்கோணவெடிகள் தம்பர் வீட்டு படலையடியில் முழங்கியது.எவனோ மதுபோதையில் தம்பர்வீட்டுமுற்றத்திலும் ஒருவெடியை தூக்கி எறிந்துவிட்டான். வண்டில் மாடும் கட்டறுத்துக்கொண்டு ஓட.....தம்பருக்கு முத்தையாவை வெட்டிக்கொல்லவேண்டும்போல் ஆவேசம் உண்டானது. பின்னாளில் காங்கிரசும்,தமிழரசும் தமிழர்விடுதலைக்கூட்டணி ஆகி பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தும்கூட பழைய தொண்டர்களான தம்பரும், முத்தையாவும் பகையாளிகளாகவே வாழ்ந்தனர். இவர்கள் பகைமை பிள்ளைகளையும் பாதித்துவிட்டது.

சேகரோ எந்தநிமிடமும் பாஸ்கரனுடன் கதைக்கத்தயாராகவே இருந்தான்.பாஸ்கரன் சேகரை திரும்பிப் பாப்பதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒருதடவை சில மாணவர்களுக்கு மத்தியில் பாஸ்கரனுடன் கதைக்க முற்பட்டான் சேகர்.

"உனக்கு ரோசம் வெட்கம் இல்லையே" என்று கோபத்துடன் அப்பால்போய்விட்டான் பாஸ்கரன்.

அதன்பிறகு படிப்பிலே முழுமனதுடன் ஒன்றிய பாஸ்கரன்,தரப்படுத்தலை வென்று கம்பஸ் பிரவேசம் செய்து வெளியேறிவந்து சிங்களநாடொன்றில் வேலை செய்தான் என்பதும், 83 இனக்கலவரத்தில் அகதியாக யாழ்ப்பாணம் வந்தபோது அவனுக்கு மனைவியும்,இரண்டு பிள்ளைகளும் இருந்தார்கள் என்பதும்,அதன்பிறகு அவனுக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலைகிடைத்தது வரைக்கும் சேகர் அறிந்த தகவல்கள்.

இந்தக்காலப்பகுதிகளில் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவே இல்லை.

பின்னர் ஊரில்தான் எத்தனை மாற்றங்கள்.இராணுவ அட்டூளியங்கள்,அட்டூளியங்களை எதிர்க்கவென இயக்கங்கள்....... கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் அகதிகளாக மேற்குலகை நோக்கி......எல்லாம்வெறுத்தநிலையில் சேகரும் ஒரு ஏஜென்சி மூலமாக டென்மார்க் வந்து ஏறக்குறைய 10 ஆண்டுகள்.

தங்கள் நட்புறவின் தொடர்பு அறுந்த பக்கங்களை இணைக்கும் ஆவலில் கடிதத்தில் ஒன்றினான் சேகர்.

".....எனது தந்தைக்கு கிடைத்த அவமானத்தால்உனது நட்பையே கேவலப்படுத்திய நான்,எனக்குள்ளே உனது நட்பை வளர்த்தேன்.என் போலித் தன்மானமோ என்னை உன்னிடம் நெருங்க விடவில்லை. 83 இனக்கலவரத்தில் குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்தும் எங்கள் கிராமத்துக்கு வந்து உன்னைச்சந்திக்காமல் போனது எனது துரதிஸ்டமே.அன்பு, பாசம் என ஆரம்பித்து எனது இதயம் வேதனைகளையே நிரப்பிவைத்திருக்கிறது. நான் பாசமே கொண்டிருந்த மூத்தமகன் இயக்க ஈர்ப்புப்பெற்று ஏதோ இயக்கம் ஒன்றில் சேர்ந்து காணாமல் போய்விட்டான். அது பெரிய இழப்பு நண்பா.இடையிடையே எழும் புத்திர சோகத்தால் கவனக்குறைவாக நடந்து வேலைநீக்கப்பட்டேன்.இவையெல்லாம் நீ அறிவாயோ இல்லையோ. இப்போது நான் பட்டதாரி பாஸ்கரனல்ல.

ஐயாவின் முதுசமாக கிடைத்த அதே மாட்டு வண்டில். அதன் ஆசனத்தில் அமர்ந்துகொண்ட பாஸ்கரனே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

உனக்கு நினைவிருக்கா? பறுவதம்ஆச்சியின் அந்தப் பாண்டிமரம்........

அதுவும் ஷெல் அடியால் பட்டுப்போய் போனவாரம் எனது வண்டிலில் விறகாக ஏற்றப்பட்டது.

அதுகூட பெரிய சோகமெனக்கு.

விறகை உரியஇடத்தில் பறித்தபின்பு வண்டிலை துப்பரவுசெய்தபோது அதற்குள்ளே சிக்கிக்கிடந்த சில உப்புக்கற்களைப் பார்த்தேன்.

எப்போதோ உப்புமூட்டை ஏற்றிப்பறித்தபோது கொட்டுப்பட்டவை அவை.

அவைகளும் மாமரத்தைப்பறிகொடுத்த ஏக்கத்தில் கலந்து கொண்டனவோ!

பிரிக்கமுடியாத புத்திர சோகமும்,ஊரின் இன்ப துன்பங்களிலிருந்து தூர விரட்டப்படுவதாக என்னுள்ளே எழும் உணர்வு அலைகளுமே இந்தக்கடிதத்தை உனக்கு எழுதத்தூண்டியது. இந்த ஊரைப்போலத்தான் அன்று நான் நின்று உன்னை விரட்டிவிட்டேனோ என்று எண்ணும் போது இதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது. பங்கர் என்னும் அந்த பதுங்குகுளியைவிடவும் நிரந்தரமான பாதுகாப்பு உனது நல்லிதய ஆதரவே.

உனது இனிய பதிலால் என்னை மறந்து கலகலவெனச் சிரித்து எங்கள் பழைய நட்புறவின் நினைவுகளோடு

இங்கே வாழமாட்டேனா?

என்றும் உனது
பிரிய நண்பன்
தம்பர் பாஸ்கரன்

சேகர் தனது தந்தை இறந்தபோதுகூட இப்படி அழுதிருக்க மாட்டான்.

ஓ.......வென்று கதறியேவிட்டான்.

சற்றுநேரத்தின்பின் தெளிந்த அவன் மனக்கண்ணில் சேகர், பாஸ்கர் வடிவில் முத்தையாவும், தம்பரும் இணைபிரியாத நண்பர்களாகி..............

"சேகர்" என்ற "முத்தையா" நேற்று மேசைமீது எழுதிவைத்த செலவுக்கணக்கு இன்றுதான் முழுமைபெற்றதோ?

வீட்டுவாடகை
மின்சாரம்
உணவு
தொலைபேசி

..............என்று தொடர்ந்த அந்தக்கணக்கில்இப்போதைய புதிய நடைமுறை ஒன்று புகுத்தப்படுகிறதோ?

"தொலைபேசி" என்ற வரி அடிக்கப்பட்டு "தம்பர்" என்று திருத்தப்படுகிறது.

மேசைமீது இன்னும் உடைக்கப்படாது கிடந்தஉள்ளூர் கடித உறையில் உள்ள "TOLDSKAT" என்னும் டென்மார்க் வரிவிபரக் கடிதம்கூட புன்னகைப்பதுபோல் தெரிவது; சேகரின் தப்பாத கணக்கைக் கருதித்தானோ?

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# "பொன்வண்டுப் பொன்ராசு"

க. ஆதவன்



பொன்ராசுவுக்குப் பொன்வண்டு பிடிக்கத்தெரியாது தான். அவனுடைய பெயரிலும் பொன் இருப்ப தாலோ என்னவோ அவனுக்குப் பொன்வண்டு என்றால் கொள்ளைப்பிரியம்.

முந்தி ஒரு நாள் வேலு என்ற பெயரையுடைய வேலுப்பிள்ளை அண்ணைதான் அவனுக்குப் பொன் வண்டு பிடிக்கும் ரகசியத்தைச் சொல்லிக் கொடுத்தவர்.

ஒரு இலந்தைமரத்தைப் பார்த்தால் அதிலை உள்ள பழங்களைப் பாக்கப்புடாது. முதல் இலையளைப் பார்க்கவேனும். இலந்தை இலையளில ஓட்டையள் இருக்கும். இலையிலை ஓட்டை எப்படி வந்திருக் கும் எண்டு யோசிச்சுப்பார். ஆராவது ஓட்டை போட்டால்தான் வரும்.

அம்மளவு உயரத்திலே ஆரும் ஏறமுடியாது. ஏறினாலும் இலந்தைமுள்ளுச் சும்மாவிடாது. அப்ப ஆரோ மனிசரில்லாத ஏதோ ஒண்டு போட்டிருக்க வேண்டும். அதுதான் பொன் வண்டு, பொன்வண்டு உச்சி இலைகளைத் தின்னும். பொன்வண்டு திண்ட பிறகு.. அந்த இலையளில ஒரு ஓட்டை விழும். ஓட்டை விழுந்த இலை இருக்கிற இலந்தை மரத்தை நீ பார்த்தியெண்டால் – அந்த மரத்திலை பொன்வண்டு இருக்கு எண்டுதான் அர்த்தம்.

வேலு என்கிற குருவினால் உபதேசிக்கப்பட்ட இந்தச் சூக்கும மந்திரம்

– பொன்ராசுவின் தாரக மந்திரமாயிற்று.

பொன்ராசு பல வெற்றிகளைக் கண்டான். ஓட்டை உள்ள இலைகளை அவன் தேடி... ஏற்கனவே அந்த மரங்களை மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். அவனைத்தேடிப் பலர் வந்தனர்.,

யாராவது சிறுவர்கள் அவசரமாக 'பொன்ராசண்ணை பொன்ராசண்ணை எனக்கொரு குட்டிப் பொன்வண்டு வேணும். நாளைக்கு நான் ஸ்கூல் முடிஞ்சு வரக்கை, எனக்குக் கட்டாயம் வேணும்' என்று கேட்டால்கூட "வாவன் பிறகு பாப்பம்" என்று மட்டுந்தான் சொல்லுவான்.

அடுத்தநாள் ஒரு அரைவாசி "Horliks" போத்தலுடன் சிறுவர்கள் வருவார்கள். அவர்களைப் பொன்ராசு அழைத்துச்செல்வான். குறிப்பிட்ட இலந்தை மரத்தில் ஏறுவான்.

ஏறும் பொழுது

"ஒருத்தரும் மேலபார்க்கக்கூடாது கீழேதான் பார்க்க வேண்டும். மேல பார்த்தால் பொன்வண்டு புடிக்கிறது கஷ்டம். அதுவும் குட்டிப்பொன்வண்டு புடிக்கிறது எண்டால்–சரியான கஷ்டம். நீங்கள் மேல பார்த்தால்– உங்கடை கண்ணுகளின்ரை பார்வையும் பொன் வண்டுகளின்ரை பார்வையும் சந்திக்கும். பார்வையள் ஒண்டுக்கொண்டு சந்திக்கப்புடாது. பார்வையள் சந்திச்சுதோ தொலைஞ்சுது. கண்ணுகளுக்கு, பார் வைக்கு, பெரியசக்தி இருக்கிறது" எண்டு சொல்லுவான்.

உடனே சிறுவர்களும் கீழே பார்ப்பார்கள்.

வேலுக்குருவின் உபதேசம் பொன்ராசுவை அழைத்துச் செல்லும் ஓட்டை விழுந்த இலைகள் அவனுக்கு அதிஸ்ட மான ஒரு வரவேற்பைக் கொடுக்கும்.

முள்ளுகள் புறங்கைகளில் கீறிய பொழுதும்– சாரத்தின் மடிக்கப்பட்ட விளிம்பு முட்களில் மாட்டுப்பட்டுக் கிழிந்துபோன பொழுதும்– மரக்கிளைகளில் சிலந்தி வலை சிலவேளைகளில். .. அவனுடைய வாயினுள்– மூக்கின் மேல் தும்பாய் இழுபட்டு தும்மிய பின்னரும் கூட–

அந்தப் புதர் –
அந்தப் புதிர் நிறைந்த கொப்புகளின் நடுவே

கையை ஓட்டுவான் பொன்ராசு. இரண்டு அல்லது மூன்று பொன்வண்டுகள்... அவன் கைகளில் அகப்படும். பொன்வண்டுகளில் உள்ள–முண்டத்திற்கும் தலைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடையிலுள்ள வெட்டும்பகுதி. அந்தப் பகுதியில் பொன்ராசுவின் கைகள் படவேபடாது. மிகமிக லாகவமாக அவன் அவற்றைப் பற்றுவான். பிடித்த பொன்வண்டுகளை சண்டிக்கட்டினுள் போட்டு.... ஒண்டுந் தெரியாதவன் மாதிரி இறங்கி வருவான்.

கீழே நிற்கும் சிறுவர்கள் அப்பொழுதும் கீழேயே பாத்துக்கொண்டு நிற்பார்கள். 'சரி வாங்கோ போவம்' எண்டு சொல்லிவிட்டு பொன்ராசு நடக்கத் தொடங்குவான். சிறுவர்களும் பின்னாலை இழுவுண்டு கொண்டு போவார்கள்.

பூவரசமரத் தடியிலை பொன்ராசு நிற்பான், சண்டிக்கட்டை அவிழ்ப்பான். அதுக்குள்ளை சின்னனாயிருக்கிற பொன்வண்டு அதுதான் குட்டிப்பொன் வண்டு.

"குட்டிப் பொன்வண்டு கேட்ட ஆள் முன்னுக்கு வா!" போத்தலுடன் ஒரு சிறுவன் முன்னே வருவான். அந்தப் போத்தலுக்குள் அந்த பொன் வண்டை உள்ளே விடுவான் பொன்ராசு.

"மூடியிலை ஒரு ஓட்டை போடுடா. உன்ரை மூக்கிலையும் இரண்டு ஓட்டை இருக்கெல்லே" எண்டு சொல்லுவான்.

சிறுவர்கள் நன்றிப்பெருக்குடன் பய பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் ஓடிச் செல்வார்கள்.

போகும் பொழுது 'சும்மாவே சொன்னவையள், அப்பாமார் பொன்வண்டுப் பொன்ராசு எண்டு' என்று சொல்லிக்கொண்டு போவார்கள்.

சிறுவர்கள் நொடிப்பொழுதில் கலைந்து விடுவார்கள். அவர்களது குதூகலம் அந்தக் குட்டிப்பொன் வண்டுடன் கரைந்து போய்விடும்..

பொன்ராசு பாவம்.

பொன்ராசுவுக்கு இது லாபந்தேடித்தரும் தொழில் அல்ல. ஆனால், ஒரு அந்தஸ்த்தைத் தேடித்தந்த தொழில். பொன்வண்டுப் பொன்ராசு எனப் பட்டம் பெற்றுத்தந்த தொழில்.

அந்தப் புழுதியும்....
புதர்களும்....
முட்களும்....

இரத்தம் வரச்செய்யும் இயற்கைச் செடிகளும்... அவனுக்குக் கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.

இந்தக் கௌரவத்தில் பொன்ராசுவுக்கு அவ்வளவு பிரியம் இல்லை. ஏனெனில், அவனுக்குள்ளே ஒரு பெரிய பிரச்சனை இருந்தது.

பொன்வண்டுகளுக்கு இன்னுமொரு பெயர் இருப்பதை பொன்ராசுவைத்தவிரப் பலர் அறியார்.

அந்தப் பெயர் சோம்பேறி வண்டு. பொன் வண்டுகள் பறப்பதற்குப் பஞ்சிப்படுபவை. தனது சண்டிக் கட்டினுள் இருக்கும் இரண்டு பொன்வண்டு களை எரிச்சலுடன் பார்த்தான்.

சாரத்தை அவிட்டு உதறிவிட்ட பின்னரும் அவை நிலத்தில் ஊர்கின்றனவே தவிர எழுந்து பறக்க வேண்டும் என்ற சிந்தனை வரவில்லை.

அவற்றைப் பறக்கப்பண்ண எத்தனித்த முயற்சிகள் தோற்றுப்போய்விட்டன. பொன்ராசுவுக்குக் கோபம் வந்தது. விறுவிறுவென்று அவற்றை மீண்டும் பிடித்து தன் சண்டிக்கட்டினுள் போட்டான் .

அதே இலந்தை மரத்தில் - அதே ஓட்டை விழுந்த இலைகளின் மத்தியில் - மிகுந்த சிரமத்துடன் அவற்றை எப்பிடிப் பிடித்தானோ - அதே அளவு சிரத்தையுடன் அவற்றை விட்டான்.

அவனது அறுநாக்கொடியில் எப்பொழுதும் அவனது அவசரதேவைக்கென ஒரு பீடி இருக்கும். அதை எடுத்துப்பத்தினான்.

அவனுக்கு வேலுக்குருவின் மேல் எரிச்சல் எரிச்சலாய் வந்தது. அவன் மீதும் நொந்து கொண்டான்.

பொன்வண்டுகளைப் பிடிக்கும் ரகசியத்தைச் சொல்லிக் கொடுத்த வேலுப்பிள்ளையண்ணை, அவற்றை எப்படிப் பறக்கப் பண்ணுறது எண்ட ரகசியத்தைச் சொல்லிக் குடுக்கேல்லையே!

வடிவா யோசி யோசியெண்டு யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்தான் பொன்ராசு. தானே தனக்கு குருவாகிப் பொன்வண்டுகளை எப்பிடிப் பறக்கப் பண்ணுறது எண்டு கற்றுக்கொண்டான்.

இவன்ரை கையைக் கண்டவுடனை பொன்வண்டுகள் பறக்க ஆரம்பித்தன.

இப்பொழுதெல்லாம் சிறுவர்கள் போத்தலுடன் பொன்ராசுவைத் தேடி வருவதில்லை.

இவனுக்கு பறக்கவிடத்தான் தெரியும், ஆனால் பிடிக்கத் தெரியாது என்ற கதை ஊர் முழுவதும் அடிபடுகிறது.

பொன்ராசுவை ஒருத்தரும் இப்ப கவனிக்கிறேல்லை.

பொன்ராசு ஏதாவது ஒரு இலந்தை மரத்தின் கீழ் இருப்பான்.

ஓட்டை விழுந்த இலைகளை அவன் இப்ப பார்க்கிறேல்லை.

துளிர்விடும் இலைகளைப் பார்க்கிறான். சோம்பேறி வண்டுகளைப் பார்க்கிறேல்லை. பறக்கும் வண்டு களைப் பார்க்கிறான்.

அந்த ஊரும் சிறுவர்களும் பொன்வண்டுப் பொன்ராசு என்ற பட்டத்தை விட்டுவிட்டு இப்பொழுது அவனுக்கு விசர்ப்பொன்ராசு என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அப்பாக்குட்டியின் அவத்தை

சிவம்


அப்பாக்குட்டி மாகோவில சுருட்டுக்கடை வைச்சிருந்தவர். 77ம் ஆண்டு கலவரத்தில சிங்களவன் கடையை ஊதிப்போட்டான். மனுசன் 80ல் டென்மார்க் வந்தது. பிறகு 83ல் மனுஷி தவமணியும், மூத்த பொடி ராஜாவும், மோள் ராணியும் டென்மார்க் வந்தினம். பிறகு 86ல் ரவியும் பிறந்திட்டான். வாழ்கை நல்ல வடிவா அமைஞ்சிட்டுதெண்டு அவருக்குப் பேய்ச் சந்தோசம். பிள்ளைகளும் படிப்பபுல அந்த மாதிரி. கடைக்குட்டி ரவி டெனிசில புலி, மனுசனும் மனுசியும் டெனிஸ்சில சமாளிப்பினம். பிள்ளைகள் தான் அவையளுக்கு டியூசன்.

பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் பாருங்கோ அப்புவும் ஆச்சியும் 3ம் உலகத்து ஆட்கள். நல்ல தமிழில் சொன்னால் பட்டிக்காடு. சிலோனில அப்பாக்குட்டி ஓடாதகழியே? எத்தனை சிங்களவங்களுக்கு தண்ணிகாட்டினவர். டெனிஸ்சில வீக் எண்டாப்போல... டொம்மே (மடையன்).

இந்த 14வருச சீவியத்தில, அப்பாக்குட்டிக்கு எல்லாம் நல்லவடிவா விளங்கிப்போட்டுது. ஊருக்கு போவோமா, கொழும்புல போய் இருப்போமா எண்டுதான் யோசனை. உதை முடிவெடுக்கிறது மனுசனுக்கு பெரிய வேலையில்லை. பாருங்கோ... பிள்ளைகள்தான் பிரச்சனைப் படுத்துதுகள்.

மூத்தது ராஜன் சொல்லுறான் இப்போ தனக்கு 18 வயது ஆமிட்டுதாம். நான் இனி ஏன் அப்பு ஆச்சியோட இருக்கவேண்டும். நான் செல்வா (selv -சுயமாக) எதையும் செய்வேன் தானே, எனக்கு லோட்டா (Lotta) டெனிஸ் காதலி இருக்கிறாள். மேலே படிக்கிறதெண்டாலும் சரி, வேலை செய்திற தெண்டாலும் சரி என் விருப்பம். இவையள் என்ன எனக்கு சொல்லுறது. "forældrene irritere mig" என்கிறான். அதென்னவெண்டால் "பெற்றோர் எனக்கு எரிச்சலையூட்டுகினம்" எண்டு சொல்லுகிறான். அப்பாக்குட்டிக்கு வந்தது பாருங்கோ ஒரு விசர்... மனுசன் சமாளிச்சுப் போட்டுது. பொடியனை ஊர் சுத்தாதே ஒழுக்கமாக இரு என்று கட்டுப்படுத்தினால், தன்னை தொந்தரவு செய்கினம் என்கிறான்.

இந்த நாட்டில பிள்ளைகளுக்கு சுதந்திரம் இருக்காம். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்செல்லோ? உதாரணத்துக்கு பாருங்கோ, இந்த நாட்டுப் பிள்ளைகள் பெற்றோரை பேர்சொல்லி கூப்பிடினம் இது நல்ல பழக்கமோ... தாய்தகப்பனுக்கு மரியாதை கொடுக்கும் நினைவுவருமோ இப்படி கூப்பிட்டால். மனம் போனபடி நடக்குதுகள். இப்ப என்னடா வென்றால் இவையள், பிள்ளைகளிடம் டிசிப்பினின், ஒழுக்கம் இல்லையாம். யாரையும் ரெஸ்பெக்ட், மரியாதை பண்ணுகிறதில்லையாம், வரம்பு தாண்டி நடக்கினமமெண்டு அங்கலாய்க்கினம். Tresserne... Tresserne எண்டு (60ம் ஆண்டுகளின் காலப்பகுதி). இப்ப நெடுகலும் 60ம் ஆண்டை பின்னோக்கி பார்க்கினம். 60ம் ஆண்டில் இவையள், குடும்பம், ஒழுக்கம், மரியாதை வரம்பு எண்டு வாழ்ந்தினமாம். பின்னோக்கிப் பார்த்து என்ன பிரயோசனம் கிடக்கு. இனி பின்நோக்கி போக முடியுமோ?



15வயது மேள் ராணியிடம் அப்பாக்குட்டி கேட்டாராம். "பிள்ளை நாங்கள் சிலோனுக்கு போவோமே? எங்கடை



படிப்பகம்

www.padippakam.com

சனங்களோடு இருக்கலாம்... நல்லது" எண்டு. உதுக்கு பெடிச்சி சொன்னாளாம் "Jeg gide ikke at høre det pjat"எண்டு. என்னெண்டால் பாருங்கோ! "உந்த கிறுக்குத் தனத்தை எனக்கு கேட்க விருப்பமில்லை எண்டு". அப்பாக்குட்டி அரசமரத்தடி கல்லுப்பிள்ளையாரானார்.

மனுசனுக்கு மகளெண்டால் உயிர். செல்லமாய் வளர்த்தார், கேட்டதெல்லாம் வேண்டிகொடுத்தார். பரதநாட்டியம் வயலின் எண்டு காசை கொட்டுது மனுசன். பள்ளி தவிர மற்ற இடங்களுக்கு தம்பியை துணைக்கு கூட்டிக்கொண்டு போ எண்டால் மாட்டாளாம். "டீஸ்கோவுக்கு அண்ணை மட்டும் போகலாம், ஏன் நான் மட்டும் போகக்கூடாதெண்டு கேட்டுப்போட்டு இனி நான் என்ன "செக்ஸ்"சை மாத்தவோ" எண்டாளாம்.

"நீங்கள் ஆம்பிளைக்கு ஒரு விதமாக பொம்பிளைக்கு ஒரு விதமாக பார்க்கிறியள், டெனிஸ் மக்களைப் பாருங்கோ வித்தியாசம் காட்டினமோ? போய்பிரண்ட் இல்லாட்டி ஏதோ குறைபாடு இருக்கெண்டெல்லோ நினைக்கினம்." எண்டாளாம். நல்ல வேளை பெடிச்சிக்கு "போய் பிரண்ட்" இல்லை.

உலகத்தில மேற்குஐரோப்பா, வடஅமெரிக்கா நாடுகள் உட்பட, இன்னும் ஒரு சில நாடுகளைத்தவிர, மற்ற எல்லா நாடுகளிலும் பாருங்கோ, கன்னிப்பெண்கள் திருமணமாகும் மட்டும், கன்னியாகவே இருக்க வேண்டுமென்டு ஒரு சம்பிரதாயம், ஒரு கட்டுப்பாடு இருக்கு. உலகச் சனத்தொகையில் 70சதவீத மக்களின் கருத்தும் விருப்பமும், ஒழுக்க நெறியும் இது தானுங்கோ.

☐ உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லோரும் வளர...காகம்

லண்டனில இருக்கிற எங்கடை சில சனங்கள் ஒடி முழிச்சு, பிள்ளைகளை இந்தியாவுக்குகல்லோ அனுப்பி படிப்பிக்கினம். கண்கெட்டபின் ஏன் சூரிய நமஸ்காரம் எண்டு சிலதுகளுக்கு விழங்குது.

இரண்டு பிள்ளைகள் காணாது, கோபதாப மெண்டாலும், கூடமாட நின்று, உறவுகளை சேர்த்து வைக்கட்டுமென்றுதானே, அப்புக்குட்டியர் நல்லா யோசிச்சுப்போட்டு, ரவியை பெத்தது. அவனுக்கு இப்ப 8வயசு. இந்த சிறுசு ஏன்னடாவெனன்றால், ஒருநாள் கனநேரமாய் T.V பார்த்துக்கொண்டிருந்தது.

"உதுகானும் ராசா இனிப்போய் பாடங்களைப் படியெணை" எண்டார் தேப்பன். இவன்னென்னடா என்றால், தேப்பனுக்கு மூஞ்சில அடிச்சதுபோல...

"Du kan ikke bestemme mig"

"முடிவுகளை எனக்காக நீ எடுக்கேலாது" எண்டு விட்டான். அப்பாக்குட்டி பேச்சு மூச்சற்ற சடமானார்.
நல்லா கவனியுங்கோ... 8 வருசத்திலே, பிள்ளையின் மீதான உரிமை, எப்படி பறிபோகுதெண்டு. பிள்ளைகளின்ரை வரம்பு மீறல்களை அவதானித்துப் போட்டு, இப்ப சொல்லினம் இவையள், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எல்லாத்துக்கும் ஓம் எண்டு மட்டும் சொல்லாமல், இல்லை எண்டும் சொல்லி பழக்கட்டாம்.

முந்தி இல்லை என்ற சொல்லை பாவிக்கக் கூடாது என்று சொன்னவையள்– இப்படியான வளர்ப்பு முறை வேண்டுமென்றுதான் மறுபடியும் 60ம் ஆண்டை பின்னோக்கி பார்க்கினம். சோத்துக்கும் சீலைக்கும் தான் செல்லமெண்டு எங்கட ஆட்கள் சும்மாவே சொல்லனம்.

உங்களுக்கு சொன்னாலென்ன அப்பாக்குட்டியர் மனுசிக்காரியோட அலட்டிக் கொண்டிருந்ததைத் தான் நான் உங்களுக்கு சொல்லுறன். வம்பளமப் பெண்டு நினையாதீங்கோ....... இன்னும் கேளுங்கோ...! என்னெண்டால்... மனுசன் மனுசியை கேட்டது... "என்னப்பா இவ்வளவும் உமக்கு நான் சொன்னனான் தானே, உம்முடைய முடிவென்ன னப்பா... இந்தியாவில செட்டில் ஆவோமா அல்லது வந்தது வரட்டுமெண்டு சிலோனுக்குப் போவோமோ... உமக்கு தெரிஞ்சதை சொல்லுமப்பா" எண்டு.

மனுசி "Jeg ved det ikke" - "எனக்கு தெரியாதெண்டு" சொன்னா. அப்பாக்குட்டிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

பிள்ளைகள் மேல் இருந்த கோபம் சேர்ந்து... "என்னடி சொன்னாய், எடியேய், உங்களுக்கு ஏதும் வேண்டவேனும் மெண்டாலும், காரியம் ஆகவேனுமெண்டாலும், எல்லாம் வடிவாய் தெரியும்... விளங்கும்... அடம்பிடித்து செய்வியள். ஏதும் பிடிக்காட்டி, எனக்கு தெரியாதெண்டு மழுப்பிப் போடுவியள். உது டெனிசில நல்ல மாய்மால வசனமடி. நான் இங்கேதான் உப்பிடிக் கேட்கிறன். நாங்கள் தெரியாட்டிதான் தெரியாதெண்டு கூறுவமடி. சும்மா மழுப்பலுக்கு உப்படி கூறமாட்டமடி..." என்று உறுமினார்.

தவமணியும் லேசுப்பட்டவளில்லை.

"இஞ்சருங்கோ... உந்த எடி... புடியெல்லாம் ஊரில... இது ஈரோப்பா... என்ன விளங்குதே... ஞாபகம் வைச்சுக் கொள்ளுங்கோ. ஒரு டிசன்ட் இல்லாத மனுசன்..." என்றா.

உங்களுக்கு சொன்னால் என்ன பாருங்கோ... அப்பாக்குட்டியருக்கு லேசா தட்டிப்போட்டுதெண்டு சனம் பறையுது.....




படிப்பகம்

www.padippakam.com

# உளைச்சல்

ரவி



கோமூனிலை(நகரசபை- Kommune)இருந்து நடந்து வந்து கொண்டிருக்கிறன். இந்த நேரம் பார்த்துத் தான் அந்த நாயின் நினைவு வரவேண்டும். எரிச்சல் எரிச்சலாக வருகின்றது. கோமூனுக்குப் போனால் எப்பவும் ஒரு பிரச்சனை. போகேக்கை கிடைக்கப் போகும் உதவித் தொகைக்கு மேலாக ஒருதொகை எதிர்பார்ப்புக்குகள்; பல விடயங்களுக்காக வரவு செலவுத்திட்டங்கள். ஆனால் அங்கை போனதும் சட்டதிட்டங்களில் மாற்றம்; இப்ப இப்படியான விடயங்களுக்கு உதவி செய்வதில்லை; நீ முன்பு அதிகமாக உதவி பெற்றிருக்கிறாய்; அதை இப்ப திருப்பி செலுத்த வேண்டும்; இப்படியாக பல. வரவு செலவுத்திட்டம் தவிடுபொடியாக சில சமயங்களில் எதிர்வாதங்கள் செய்திருக்கிறேன். ஆனால் எடுபடுவ தில்லை. எனது இயலாமையை நினைத்து வெந்து கொண்டு வெளியே வருவேன். அப்ப பார்த்து இந்த நாயின் நினைவு எனக்கு எப்படியும் வந்துவிடும்.

நான் நாட்டிலை படித்துக்கொண்டிருந்த காலத்திலை இந்த நாய் எங்கள் வீட்டில் இருந்தது. எனது தம்பி தான் பிடித்துக்கொண்டு வந்தவன். எனக்கு நாய், பூனையென்றால் பெரிதாக விருப்ப மில்லை. ஆனால் அம்மா பாவம் அது நிற்கட்டும் என்று நாய்க்கு ஆதரவு கொடுக்க அது வீட்டில் ஒருவாரகிவிட்டது.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு, அதன் பெயரும் வீரன். நாய் மஞ்சளுக்கும், மண்ணிறத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிறம். எல்லாரும் செல்லம் கொடுக்க அது வீட்டுக்குள் எல்லாவிடத்திலும் நடமாடத் தொடங்கியது. ஆனால் எனக்கும், நாய்க்கும் இடைவெளி பெரிதாக குறையவில்லை. தம்பி, தங்கைச்சிமார் நாயுடன் கொஞ்சி விளையாடும் போது அதைப்பார்க்க ஆசையாக இருந்தாலும் எனக்கு நாயின் மேல் விருப்பமில்லை என்பதை விட்டுக்கொடுக்க முடியவில்லை. இதனால் நான் வீட்டில் இருக்கும் சமயங்களில் அது வீட்டுக்குள் வரத் தயங்கும்.

சில வருடங்களில் நாயின் குழந்தைத்தனம் போய், பெரிதாக வளர அதன் செல்வாக்கு குறையத் தொடங்கியது. தம்பிக்கு, அப்பா சமிக்கிள் ஒன்று வாங்கிக்கொடுக்க அவனும் நாயிடம் ஈடுபாடு காட்டு வதில்லை. தங்கைச்சிமாரும் அப்படியே. அது கூடிய வேளைகளில் மாலின் ஒரு புறத்தில் அதுக்கென்று போடப்பட்ட சாக்கில் சோகத்துடன் படுத்திருக்கும்.

நான் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் சாப்பாட்டை போட்டுக்கொண்டு முன் கூட்ஸ்க்கை வந்து அதன் ஒரு கரைச் சுவரில் இருந்துகொண்டு தெரு ஒழுங்கையைப் பார்த்துதுக் கொண்டு சாப்பிடுவது வழக்கம்.

ஆரம்ப காலங்களில் எனக்கு கிட்டவே வராத நாய், இப்பொழுது நான் சாப்பிடத் தொடங்கும் போது கொஞ்சத்தூரத்தில் வந்து படுத்துக்கொண்டு நான் சாப்பிடுவதை பார்த்துக் கொண்டிருக்கும். தூரத்திப் பார்ப்பேன். அது அலுப்புடன் எழுந்து கொஞ்சத் தூரம்போய் தள்ளிப் படுத்துக்கொள்ளும். நான்



படிப்பகம்

www.padippakam.com

எங்கையாவது பார்வையைத் தவறவிட்டால் அது திரும்பவும் எழுந்துவந்து பழையஇடத்தில் படுத்துக் கொள்ளும். இது எனக்கு எப்பவும் எரிச்சலைத் தந்துகொண்டிருந்தது. ஆனால் மற்றவர்களின் கவனிப்புக் குறைந்த நாய் இந்த வழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. சில வேளைகளில் முள்ளு, எலும்பு போன்றவற்றை எறிவேன். ஓடிவந்து சாப்பிடும். நாட்கள் செல்ல நான் சாப்பிடும்போது அது வந்து படுக்கும் இடத்தின் இடைவெளி குறையத் தொடங்கியது. நல்ல சாப்பாடு என்றால் நானே முழுவதையும் சாப்பிட்டுவிடுவேன். எனக்கு பிடிக்காத கறிகள் என்றால் அதற்கு முன் எறிவேன். எதென்றாலும் சாப்பிட்டுவிடும்.

சிலவேளைகளில் அதைப் பார்க்க பரிதாபமாக இருக்கும். அது இப்பவெல்லாம் நான் சாப்பிடும் போது நான் கோப்பைக்குள் கைவைப்பது, குழைப்பது, வாய்க்குள் வைப்பது போன்ற அசைவுகளை எல்லாம் கவனிப்பதை நான் கவனித்தேன். அது நாக்கை தொங்கப்போட்டுக் கொண்டு படுத்திருக்கும். வாயிலிருந்து வீணி வழியும். அப்ப அருவருப்பால் சரியான கோபம் வரும். முதலில் "அடீக் அடீக்" என்று துரத்திப் பார்ப்பேன். கைகளை வீசியும் துரத்துவேன். அது கொஞ்சத்தூரம் எழுந்து நடந்துவிட்டு, திரும்பவும் அதில் வந்து படுத்துக்கொள்ளும். ஆத்திரத்தில் "சுரணை கெட்ட சென்மம்" என்று தீட்டித் துரத்துவேன். அது தன்னுடைய நடைமுறையை மாற்றுவதாயில்லை. இப்போதெல்லாம் நான் ஏதாவது போடாவிட்டால் இறுமத் தொடங்கியது; குரைத்து எதிர்பைக் காட்டத் தொடங்கியது.

சிலவேளைகளில் பசியாக வரும் நேரங்களில் அல்லது ஏதாவது பிரச்சனையான நேரங்களில் நாய் மீது சரியான கோபம் வரும். எல்லாமுறையிலும் துரத்திப் பார்ப்பேன். அன்று ஒரு நாள் காலுக்கு எட்டிய தூரத்தில் படுத்துக்கொண்டு வழமைபோல் வீணி வழித்துக்கொண்டிருந்தது. அருவருப்பாக இருந்தது. துரத்திப் பார்த்தேன். அது கொஞ்சமும் அசைவதாயில்லை. காலினால் எட்டி உதைப்பது போல் பாவனை செய்தேன். தீடீரென நாய் எட்டி எனது காலில் கவ்விவிட்டது. காலில் இரத்தம் வழிந்தது. அம்மா, தம்பி நாயை அடிப்பதற்கு துரத்தினார்கள். அது ஓடிவிட்டது.

எனக்கு ஏற்புவலி தடுப்புஊசி போடப்பட்டது. எனக்கு ஏனோ தெரியவில்லை, அதற்குப் பிறகு நாயின் மேல் கோபத்துக்கு பதிலாக பரிதாபம்தான் ஏற்பட்டது. வீட்டில் மற்றவர்கள் அதை கலைத்து துரத்தினாலும் நான் சாப்பிடும் போது அதற்கு சாப்பாடு போட்டேன். அது முன்பு போல் இல்லை. சாப்பிடுவதும் குறைவு. அதனால் முன்புபோல இறும முடியவில்லை. எங்கள் வீட்டை விட்டு அதனால் எங்கும் ஓடிவிடவும் இயலவில்லை. இது அதன் இயலாமை. எங்கள் வீட்டில் அது தன் தேவைக்காக வாலாட்டும் நிலை. ஏனோதானோ என்று வாழ்ந்த அது கொஞ்ச நாளில் தானாகவே இறந்துவிட்டது. இரண்டு நாட்களாக சாப்பிடகூட முடியாமல் அழுதேன்.

இங்கே இந்த நாயின் நினைவு வந்து என்னை அடிக்கடி துன்புறுத்துகிறது.

## சிறந்தசிறுகதை

இந்தச்சிறுகதைச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளிலிருந்து மிகச்சிறந்த சிறுகதைகள் மூன்று தெரிவுசெய்யப்படவுள்ளது.

இத்தேர்வுக்காக காகத்தின் வாசகர்களில் 15 பேர்களுடன் காகம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளும்.

தேர்வுசெய்யப்பட்ட வாசகர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்.

தெரிவுசெய்யப்படும் சிறந்தசிறுகதைகளின் படைப்பாளிகளுக்கு காகத்தின் சான்றிதழ் வழங்கப்படுவதோடு அவர்களின் விருப்பத்திற் கேற்ற நண்பர் ஒருவருக்கு ஒருவருடத்திற்கான காகம் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த சிறுகதைகள், தேர்வுக்குழு வாசகர்களின் விபரங்கள் காகம் 7ல் வெளியாகும்.

ஆசிரியர்

## ஓவியர்களுக்கு நன்றி

இந்த சிறுகதைச்சிறப்பிதழுக்கு அழகூட்டும்படியாக நல்ல பல ஓவியங்களை வரைந்த

திரு. வை. சி. சிவநாதன்

திரு. ரி. சௌந்தர்

செல்வன். ரி. நிசாந்தன்

செல்வன். எஸ். கௌசிகாத்மஜன்

அவர்களுக்கு காகம் நன்றிசொல்லிக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# நாங்கள்



"மெய்யப்பா.... இஞ்சாருங்கோ... இஞ்சாருங்கோ... எழும்புங்கோவன்..... எழும்புங்கோ" எனப்பலமுறை தட்டினாள் இந்திரா. நாதன் கண் விழிக்கவே மில்லை, அசையாது மூசிக்கொண்டே படுத்திருந்தான். "இஞ்சேருங்கோ" என்று ஒருபெரிய அதட்டலுடன் அவனைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினாள் இந்திரா. திடுக்கிட்டு முழித்துக்கொண்டான் நாதன்.

"என்னப்பா விடிஞ்சு போச்சே" நாதன் வெறுப்போடு கேட்டான்.

"உங்களை எத்தனை தரம் எழுப்புகிறது... மாடு போலை மூசிக்கொண்டு படுக்கிறியள், எனக்கு ஏதோ பயமாயிருக்கு, வெளியிலை ஏதோ கன நேரமாய் சத்தமாகக் கிடக்கு. அதுதான் எழுப்பினனான்" என்றாள் இந்திரா.

"கொஞ்சம் சத்தம்போடாமல் கதையப்பா, பொடியன் எழும்பப்போறான், இண்டைக்கு வெள்ளிக்கிழமை, உதுகள் குடித்துப்போட்டுச் சத்தம் போடுங்கள் தெரியும்தானே... நீ ஒன்றும் யோசியாமல் படு" என்று கூறியபடி தனது போர்வையை இழுத்து சரி செய்து மீண்டும் தலையணிக்குள் முகத்தை புதைத்துக் கொண்டான் நாதன்.

இந்திரா ஒன்றும் பேசாமல் படுக்கையறையின் ஜன்னலைப் பார்த்தபடி படுத்திருந்தாள். தொட்டிலில் மகனையும் பக்கத்தில் கணவனையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, கண்களை மெல்லென மூட முனைந்தாள் இந்திரா.

இந்திராவுக்கும் அடுத்தடுத்த மாதத்தில் குழந்தை பிறக்கவுள்ளது. அவளால் விருப்பம்போல் நீட்டி நிமிர்ந்து படுக்க முடியவில்லை. ஒருமாதிரி கால்களை இழுத்து மடித்து சுகமாய் படுக்கலாம் என முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

மின்னல் போன்ற வெளிச்சத்துடன் சடார் என்று ஏதோவொன்று வந்து அவர்கள் ஜன்னலில் பட்டு வீழ்ந்தது. தீடீரென்று வந்து மோதிய சத்தத்தால் ஒரு கணம் அவள் இதயமே நின்றுவிடும் போல் திடுக்குற்றாள் இந்திரா.

நாதன் அசையாது படுத்திருக்கிறான்.

என்னவாயிருக்கும் என்று யோசித்து முடிவெடுப்பதற்குள் மீண்டும் ஒரு தீப்பந்தம் போன்ற ஒளியுடன் ஏதோவொன்று அவர்கள் ஜன்னலில் பட்டிறங்கியது.

நாதனும் விழித்துவிட்டான். குழந்தையும் முழித்து விட்டது. "என்னப்பா சத்தம்" என்றபடி இந்திராவைப் பார்த்து வினவினான் நாதன்.

"எனக்கு ஏதோ பயமாயிருக்கு, நீங்கள் சொல்லுவதுபோல் உது குடித்துவிட்டு செய்வது போல் எனக்குத் தெரியவில்லை. என்ன கோதாரி நடக்குதோ தெரியாது" என்றாள் இந்திரா கவலையுடன்.

கொஞ்ச நேரம் இருவரும் ஒன்றுமே கதைக்க வில்லை. வெளியில் இருந்துவரும் இரைச்சல் காற்றோடு கலந்து வந்தது. திடுக்கிட்டு எழும்பிய குழந்தை மெல்ல அனுகிவிட்டு மீண்டும் உறங்கிக் கொண்டது.

நாதன் கட்டிலை விட்டு மெல்ல எழுந்தான். "ஐயோ நீங்கள் ஒன்றும் எழும்ப வேண்டாம்.... பேசாமல் படுங்கோ...". அவனை படுத்தபடியே மறித்தாள்.

"நான் ஒரு இடமும் போகவில்லை, உதிலை கேட்டினுக்குள்ளாலை பார்க்கிறன்" என்று சொன்னான். திருப்பி என்னதான் சொன்னாலும் இவர் கேட்கவா போகிறார் என நினைத்துவிட்டு பேசாமல் இருந்தாள்



படிப்பகம்

www.padippakam.com

இந்திரா.

மெல்ல மெல்ல நடந்து ஜன்னல் அருகில் வந்து நின்றான் நாதன். வெளியில் சத்தம் கூடிக் கொண்டே போனது. ஆட்கள் பலர் சேர்ந்து சத்தம் போடுவது தெளிவாகக் கேட்டது.

ஜன்னலின் ஒரு மூலைப்பக்கம் நின்று ஒரு பக்கச் சீலையினூடாக வெளியே பார்த்தான். நாதனின் இதயம் 'படக் படக' என்று வேகமாய் அடித்துக் கொண்டது. ஏதோ நல்லகாலம் நாங்கள் மூன்றாம் மாடியில் இருக்கிறம் என்ற ஒரு திருப்தியுடன் மீண்டும் ஒருதரம் எட்டிப் பார்த்தான்.

ரோட்டுக் கரையில் நின்ற லைற் வெளிச்சத்தில் புகைமண்டலம் கீழிருந்து மேல்நோக்கி எழுவது தெளிவாய்த் தெரிந்தது. புகைக்கூட்டம் லைற்றைச் சுற்றி வளைந்து கொண்டு நின்றது. நிமிர்ந்து நேர் எதிரேயுள்ள கட்டிடங்களைப் பார்க்கின்றான்.

எதிர் கீழ்மாடிக் கட்டிடத்தின் ஜன்னல் வழியாக தீச்சுவாலைகள் பல இடங்களில் கொழுந்துவிட்டு எரிவது தெளிவாய்த் தெரிந்தது.

அது... அவனுக்குத் தெரிந்த வியட்நாம் குடும்பம் இருக்கும் வீடு. பக்கத்துக்கட்டிடம்.... அங்கேயும் வேறு வெளிநாட்டவர்கள்..... நாதனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. என்ன நடக்கிறது... யார் இதைச் செய்கிறார்கள் என்று அவனுக்கு தெளிவாய் விளங்கியது.

திரும்பியபடி குழந்தையையும், இந்திராவையும் ஒருதரம் திரும்பிப் பார்த்தான். இப்போது என்ன செய்யலாம்? குழந்தை வயிற்றோடு இருக்கும் என் இந்திராவுக்கு... இந்த நிலையை எப்படி தெளிவு படுத்தமுடியும். இந்த இடத்திலிருந்து பிள்ளைத் தாச்சியையும், குழந்தையையும் கொண்டு எப்படி நான் தப்பித்துக் கொள்ளுவேன்? போன்ற பல கேள்விகளை அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

'எப்படியும் இதை இந்திராவுக்குச் சொல்லத்தானே வேண்டும்; சொல்லாமல் நான் என்ன செய்யலாம்' என நினைத்துக் கொண்டு இந்திராவைத் திரும்பிப் பார்த்தான். அவள் மேலே பார்த்து யோசித்தபடி படுத்திருந்தாள்.

ஐயோ! இந்த வெளிநாட்டு வாழ்க்கையில்.... அங்கிருந்து உயிர்தப்பி வாழவேண்டும் என்பதற்காய் இங்கே வந்து இங்கேயும் நிம்மதியில்லாமல்... ஒரு கணம் தன் நாட்டையும் மண்ணையும், தனது சொந்த மண்ணையும், தனது உறவினர்களையும் மனதில் நினைத்துக் கொண்டான் நாதன்.

எங்கடை நாட்டிலை பிரச்சனை இல்லாவிட்டால் அம்மா ஐயாவோடு என்ன நிம்மதியாய்... என்ன சுதந்திரமாய் வாழந்திருக்கலாம் என நினைத்துக் கொண்டபடியே இந்திராவின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான் நாதன்.

"என்னப்பா... என்ன யோசிக்கிறீயள்? முகமெல்லாம் மாறிப் போச்சு... என்ன நடக்குது?" எனப் பதட்டத்துடன் வினவினாள் இந்திரா.

"இந்திரா முதல் எழும்பு" என்று அவளின் தோளைப் பிடித்து மெல்ல உயர்த்தினான்.

இந்திராவும் கையை ஊன்றியபடி மெல்ல எழுந்து சரியாக இருக்க முயற்சித்தாள்.

"இந்திரா நான் சொல்லுவதை கொஞ்சம் பயப்பிடாமல் கேள், பயப்படவேண்டாம்" என்று அவள் தோளைப் பிடித்தபடி சொல்லத் தொடங்கினான்.

"வெளியிலை ஏதோ கலவரம் நடக்குது போலை.. அங்கே அந்த வியட்நாம் ஆட்கள் இருக்கிற கட்டிடம் எல்லாம் எரியுது. அதுக்குப் பக்கத்திலையும் எல்லாம் எரியுது. கீழேயும் எல்லாம் ஏதோ எரியுதுபோலை கிடக்கு.

நாங்கள் இருக்கிற இந்தக் கட்டிடமும் தனித்து வெளிநாட்டவர் இருக்கிற இடம் தானே. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை; இங்கே இருப்பது ஆபத்தானது; என்னென்று வெளியாலை போய்த் தப்பலாம்; அதுதான் நானும் யோசிக்கிறன்" என்றான் நாதன்.

இந்திராவால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. "ஐயோ கடவுளே! நாங்கள் என்ன பாவம் செய்தோமோ? அங்கே இருக்கமுடியவில்லை என்று இங்கே ஓடி வந்து.... கடவுளே இஞ்சேயுமா ஐயோ! நாங்களென்றாலும் பரவாயில்லை, என்ரை குழந்தைகள்..." என்று தொட்டிலில் இருக்கும் குழந்தையைப் பார்த்தபடி தன் வயிறையும் தடவியபடி அழுதாள். கண்களிலிருந்து பொலபொலவென நீர் வழிந்தொழுகியது.

"நீ ஒன்றுக்கும் பயப்படாதை இந்திரா... முதலில் பொலிசுக்கு ரெலிபோன் எடுப்போம்" எனக்கூறியபடி கட்டிலின் அருகில்இருந்த ரெலிபோனைத் தூக்கினான். ரெலிபோன் செத்துக்கிடந்தது. ரெலிபோன் துண்டிக்கப் பட்டிருந்ததை இந்திராவுக்குத் தெளிவுபடுத்தினான் நாதன்.

நாஜிகள் எவ்வளவோ கொடூரமானவர்கள், எவ்வளவு நிறவெறி பிடித்தவர்கள், எப்படியான பயங்கரமானவர்கள், அதே நேரத்தில் எவ்வளவு புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள் என்பது நாதனுக்கு புரியாதது அல்ல.

கொஞ்சநேரம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை, குழந்தையின் மூச்சுச் சத்தம் மட்டும் மெல்லியதாய் கேட்கின்றது.

மெல்ல மெல்ல படியால் இறங்கி பின்பக்கக் கதவால் போனால் நிலவறைப்பக்கம் போகலாம். அதிலிருந்து ஒரு பத்துயார் தூரம்தான் வரும் பின் தோட்டம்; பின்தோட்டத்துக்குள் இறங்கினால் அங்காலை ஒரு சின்ன மரவேலி; அதையும் தாண்டிப் போனால் பெரும்வீதி; வீதிக்கு வந்தால் வெளிச்சம்தானே; அப்படி வந்தால் தப்பிவிடலாம். இது ஒன்றுதான் அவர்கள் தப்பிப்பதற்கான முறை. இல்லாவிட்டால்



படிப்பகம்

www.padippakam.com

முன் வீட்டில் குடியிருக்கும் அனாஸ் என்ற கிழவனின் வீட்டில் போனால் ஒளிந்து கொள்ளலாமா? கிழவனால் எமக்குப் பாதுகாப்புத் தர முடியுமா? கிழவனே சரியாக நடக்கவே மாட்டாத ஆள். இப்பபோய்த் தட்டினால் அவர் எழும்புவாரோ..." எனப்பலமுறை யோசித்து விட்டு தனது எண்ணத்தை இந்திராவுக்குத் தெரியப்படுத்தினான்.

இந்திராவால் சம்மதிக்க முடியவில்லை, "என்னப்பா சொல்லுறியள், அதுவும் இந்தப்பிள்ளை வயிற்றோடு.... சும்மாவே நடக்கமுடியாத நிலையில்... இந்த நேரத்தில் நான் எப்படியப்பா?" விக்கிவிக்கி அழுதாள். அவளால் பெரிதாய் அழவும் முடியவில்லை. நா தளதளத்து தொண்டை கனைத்துக் கொண்டது.

"இந்திரா இதுக்குள்ளையே இருந்து எரிந்து சாம்பலா வதை விட தப்பிக்கொள்ளுவதுதான் புத்திசாலித்தனம். எப்படியும் நாம் தப்ப வேண்டும். இவ்வளவு நடந்தும் பொலிஸ் வந்து எங்களை காப்பாற்றியிருக்க வேண்டும். நாங்கள் யாரையும் நம்பியிருக்கேலாது. தம்பியை நான் தூக்குகிறன். என்ன செய்வது இந்திரா...? இதுதான் விதியென்றால் யார்தான் என்ன செய்யமுடியும். நீ பயப்படாமல் வா. அது எல்லாம் நல்லபடியாக நடக்கும். இது என்ன ஊரே? நிண்டு சண்டித்தனம் செய்ய" அவளைத் துரிதப்படுத்தினான்.

இந்திரா ஒன்றும் பேசாது ஜக்கற்றை எடுத்துக் கொழுவினாள். குழந்தையையும் கம்பளி ஒன்றினால் சுற்றியபடி தூக்கிக்கொண்டு கதவருகில் வந்து நின்றனர்.

நாதன் வீட்டை ஒருகணம் நோட்டமிட்டான். ரீவி, டெக், ரேடியோ, சோபா, அலுமாரி..... அதனுள் எத்தனை அழகுப் பொருட்கள். ஒவ்வொன்றாய் அவன் கண்களில் பட்டது. சுவரில் தொங்கிய மகனின் முதலாவது பிறந்தநாள் படம் ஒன்று அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது. எவ்வளவு கஸ்டப்பட்டு உழைத்துச் சேர்த்து வைத்த சொத்துக்கள்......

மெதுவாய் கதவைத் திறந்தான். வெளியில் சத்தம் கொஞ்சம் பலமாய்க் கேட்டது. புகையின் மணமும் படிகளில் மணக்கத் தொடங்கியது.

குழந்தையைக் கையிலேயும், இந்திராவை மெல்ல அணைத்தபடியும் மெதுமெதுவாய் படிகளில் இறங்கினான். இந்திராவால் சந்தர்ப்பத்திற்கு தகுந்த வாறு வேகமாய் நடக்க முடியவில்லை. கூடியவரை அவனுடன் சேர்ந்து ஒத்துழைத்தாள்.

ஒருமாதிரி மூவரும் கீழே வந்து விட்டனர். வெளியே சில கார்கள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதும், சில கார்கள் தலைகீழாய் பிரட்டப்பட்டு அரைகுறையாய் எரிந்து கொண்டிருப்பதும் வெளிக் கதவின் கண்ணாடியூடாக மங்கலாகத் தெரிந்தது.

வெளியிலிருந்து வரும் வெளிச்சத்தின் உதவியால் நிலத்தறைக்குப் போகும் கீழ்ப்படிகளைக் காட்டி அவளை மெல்லென இறக்கினான்.

நிலத்தறைக்குப் போகும் ஓடை கும்மென்று இருட்டாய் இருந்தது. ஒன்றுமே தெரியவில்லை. நாதனின் கைகளை இறுகப்பற்றிக் கொண்டாள் இந்திரா.

அவளின் கையைப் பிடித்தபடி "இந்த பக்கமாய் போய் ஏறினால் பின்பக்கத்தோட்டத்துக்குள் நுழையலாம்" என அவள் காதுகளில் சொன்னான். நாலு ஐந்து அடி எடுத்து வைத்தபின் "பயப்படாதை... இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் தப்பிவிடலாம்" என்றான் நாதன்.

"இஞ்சையப்பா! இதுக்குள்ளை சிகரட் புகை மணக்குது" என மெல்ல இரகசித்து முடிப்பதற்குள்....

ஐயோ! என்ரை அம்மா என்றபடி குழந்தையோடு கீழே தடக்கி விழுந்தான் நாதன்.

அவனால் ஒன்றுமே கதைக்க முடியவில்லை; பார்க்க முடியவில்லை; ஒன்றுமே உணரவும் முடியவில்லை.

"என் இந்திரா... என் குழந்தை" என்று அவன் இதயம் மட்டும் அழுதழுது இரத்தம் வடிந்தது.

இலேசாக நினைவுகள் திரும்பத் தொடங்க தலை "விண்விண்" என்று வலித்தது. கண்கள் மெல்லத் திறக்க ஆரம்பித்தது. மண்டையிலிருந்து கசிந்து வழிந்து கொண்டிருந்த இரத்தம் அவனது வாயில் பட்டு கரித்தது.

தான் குப்பறபடுத்திருப்பதையும், நிலத்தறையிலிருந்து இழுத்து வரப்பட்டிருப்பதையும் நாதன் தெளிவாய் உணருகிறான்.

ஐயோ என் இந்திரா! என் குழந்தை என நினைத்தபடி தலையை மெல்ல உயர்த்துகிறான்.

வரிவரியாக முழங்கால் வரை வரிந்து கட்டிய ஆமிச்சப்பாத்துக்கள்... பெரியதாய் தெரிகின்றது. தலையை மேலும் உயர்த்த முயற்சித்தான்.

அங்கே நின்றவர்களில் ஒருவன் தனது சப்பாத்துக் காலால் கொழுவி நாதனை பிரட்டி நிமிர்த்தி விடுகிறான்.

நாதன் கண்களைத் திறந்து பார்க்கிறான். கண்கள் கூசுகின்றது. ஏற்கனவே அவன் சந்தித்த முகங்கள். அவனைச் சுற்றி வட்டமாய் நிற்கின்றனர்.

என்றோ ஒருநாள் சுப்பமாக்கற்றில் வண்டிலால் இடித்தவன்; நடைபாதையில் சளியால் காறித்துப்பியவன்; barஇல் பியரால் ஊத்தியவன்; வோசிங் மெசினிலிருந்து உடுப்புகளை எடுத்துஎறிந்தவன்; இன்னும் எங்கெங்கோ அடிக்கடிகண்ட பல வெள்ளை முகங்கள். எல்லோரது தலைகளிலும் மயிர்வழித்து மொட்டையடிக்கப் பட்டிருந்தன. எல்லோரது முகங்களும் கோரமாய் அவனைக் கடித்து தின்றுவிடுவது போல் பார்த்துக் குமிறிக் கொண்டிருந்தனர்.

பயத்தினால் நாதனின் உடல் படபடத்தது. அவனது ஈரல்குலையும் குலுங்கியது. அவனால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. நாதன் அரைகுறையாய் அவர்கள் மொழியில் புலம்பத்தொடங்கினான்.



படிப்பகம்

www.padippakam.com

"என் மனைவி! என் குழந்தை!" அவனால் தெளிவாகக் கதைக்க முடியவில்லை. உடல் பதற நாவும் தளதளத்தது.

எல்லோரும் சேர்ந்து பலமாகச் சிரித்தனர். "என்ன உனக்கு குடும்பமா வேண்டும்? கறுத்த ஊத்தைப் பண்டியே!" என்று ஒருவன் வந்து நாதனின் கழுத்தில் ஏறி உழக்கி அமர்த்தி நசிக்கின்றான். நாதனின் மூச்சு ஒருதரம் அடைத்து அடைத்துத் திணறியது. விக்கியபடியே "என் இந்திரா! என் குழந்தை" எனக் குரல் அடைத்தது.

"இந்தா... அதோ பார் உன் குடும்பம்... உன் இனத்துக் கறுப்புப் பண்டிகள், சொறிப்பண்டிகள்" எனக் கூறியபடி ஒருவன் நாதனைத் தூக்கி அங்கு நின்ற ஒரு வாகனத்தின் அருகில் சேர்த்து நிறுத்தினான்.

நாதனால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. வாகனத்தொடு சேர்ந்து நிற்பதுகூட ஓரளவு சுகம் போல தென்பட்டது.

"அதோ பார்! உன் குடும்பம்" என்றபடி இன்னொருவன் பக்கத்தில் எரிந்து கொண்டிருக்கும் ஒரு பெரிய சுவாலையின் பக்கம் காட்டினான். அவர்கள் எல்லோரது சிரிப்பொலிகள் அந்தக் கட்டிடங்களில் பட்டுத் தெறித்தது.

நாதனின் கண்கள் மெல்ல மெல்ல இருட்டாகியது. ஒரு சில ஆட்கள் எரிந்துகொண்டிருக்கும் அந்தச் சுவாலையினுள் தள்ளப்படுவது அவன் கண்களில் தெரிகின்றது. கண்களைக் கசக்கியபடி ஒன்றும் பேசாது சுற்றும்முற்றும் பார்க்கின்றான்.

அவனுக்குத் தெரிந்த துருக்கிக்காரன் அக்பீனாவின் மனைவியும், பக்கத்துக் கட்டிடத்தில் இருக்கும் நவரத்தினமண்ணையும் அரைகுறையாக எரிந்து கொண்டிருக்கிறார்கள்.

"ஐயோ என் மனைவி, என் குழந்தை எங்கே?" என்று ஓவென்று கதறிக்கதறிக் அழுகின்றான்.

உன் மனைவியா... ஆ...கா ஆ....கா எல்லோரும் ஒருமித்துச் சிரிக்கின்றனர். "அவள் எப்போதே எரித்துக் கருக்கப்பட்டு விட்டாள்" ஆகா....ஆகா பலமாகச் சிரிக்கின்றனர்.

நின்றவர்களில் ஒருவன் "அதோ உன் செல்லக் குழந்தை" என்று ஒரு பக்கம் காட்டுகிறான். நாதனால் நிமிர்ந்து நிற்கமுடியவில்லை. துவண்டு தூங்கியபடி அவர்கள் காட்டிய திசையைப் பார்க்கிறான்.

குழந்தைகள் பல பாவைப் பிள்ளைகள் போல் அசைவற்றுச் செத்துக் கிடக்கிறது. தனது மகனைச் சுற்றிவந்த கம்பிளியும் இரத்தத்தால் நிறம்மாறியிருந்தது. அதன் அருகே வெட்டி அறுக்கப்பட்ட சில பிஞ்சுக் கால்களும், கைகளும் ஓரமாய்.... ஒரு பலஸ்தீனியக் குழந்தையின் கால்கள் இரண்டும் அறுந்து குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்தது.

"என்ன இன்னும் இவனைக் கொல்லாமலா வைத்திருக்கின்றீர்கள்" என்றபடி ஒருவன் ஓடி வந்தான். "நேரத்தை வீணடிக்காதீர்... விரைவில் இவனைக் கொல்" என்று குமிறினான்.

"இல்லை...இல்லை..இவனை உடன் கொல்லக்கூடாது. இவற்றைப் பார்த்துப்பார்த்து அணுவணுவாய்ச் சாகவேண்டும்" என்றான் இன்னும் ஒருவன்.

"ஒரு கறுப்பனை அழித்து ஒரு வெள்ளையனின் வாழ்வை மேம்படுத்து"
"ஜேர்மனி... ஜேர்மனியருக்கே.....
"எங்களைச் சுரண்ட வந்த கறுத்தப்பண்டிகளைச் சுட்டுக்கொல்"

"வெளிநாட்டவரே!... வெளியேறுங்கள்!"

போன்ற பலத்த கோசத்துடன் ஒரு கூட்டம் அந்த இடத்தில் வந்து கூடியது.

கூட்டத்திலிருந்து வந்தவர்களில் ஒருவன் நாதனைக் கண்ட ஆவேசத்தில் தன் கையில் இருந்து ஒரு இரும்புக் கோடரியால் தலையில் ஓங்கி வெட்டுகின்றான். இரத்தம் பீறிட்டுத் தெறித்து அவர்களின் உடம்பிலும் படுகின்றது. நான் மெல்லெச் சரிய இன்னொருவன் ஈட்டி போன்ற ஓர் ஆயுதத்தால் அவன் வயிற்றில் குத்தி அவனை நிமிர்த்துகின்றான். பக்கத்தில் நின்றவன் வாளால் ஓங்கித் தோள்மூட்டை வெட்டிப்பிளக்க..... கையறுந்து தொங்க "குபு...குபு..." என இரத்தம் அவனது தலையிலும், வாயினாலும் கக்கிக்கொள்ள நாதன் மரம்போல் சரிந்து வீழ்ந்தான்.

மெல்ல மெல்ல அவனது நாடித்துடிப்புகள் இறங்கின. இந்திரா, குழந்தை என ஏங்கிஏங்கி அழுத அந்த இதயம் இறுகிப்போய் இயங்க முடியாமல் தனது துடிப்பை நிறுத்திக் கொண்டது.

விறைத்தபடி நாதன் பிணமாகக் கிடந்தான்.

"ஒரு கறுப்பனை அழித்து ஒரு வெள்ளையனின் வாழ்வை மேம்படுத்து"
"ஜேர்மனி... ஜேர்மனியருக்கே.....
"எங்களைச் சுரண்ட வந்த கறுத்தப்பண்டிகளைச் சுட்டுக்கொல்"

"வெளிநாட்டவரே!... வெளியேறுங்கள்!"

நாஜிகளின் கோசம் வானைப் பிளந்து காற்றோடு கலந்து உலகெங்கும் செய்திகளாயின.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும், சாமத்திய வீடுகளிலும், சீட்டுக்கூறும் இடங்களிலும், திருமண வைபவங்களிலும் அன்றாடம் கூடிக்குடித்துக் குலாவுவதற்காய் இளைஞர் பலர் ஒன்றுகூடும் இடங்களிலும் "என்ன ஏதோ.... ஜேர்மனியில் தமிழ்க் குடும்பத்தை.... நாஜிகள் கொண்டு...... போட்டா.....ங்களாம். அறிஞ்சனிங்களோ...?" என்று மிகச்சாதாரணமாய் பேசிக்கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# மனதோடு பேசுதல்
(தொடர்: 5)

செல்வன்



அது ஒரு ஆற்றோரம்
நாமிருவர்
காத்திருந்தோம், நெடுநேரம்.....

காற்றின் சீண்டல்களில்
சிணுங்கும் தென்னைகள்
ஆற்றின் ஓரத்தை
அழகுக்கு மேலும் அழகு செய்தன.

காத்திருப்பதும்
மனதோடு பேசிப்பேசியே
காலத்தை கரைத்துக்கொள்வதும்
எனக்கு பழக்கமானவை.

அவை
உனக்கு புதியவை போலும்
நதியின் வழியே பார்ப்பதும்- பின்
பெருமூச்சுடன் வந்து அமர்வதும்......

பொறுமையின்
கையிறு நிலையில்- இறுதியாக
நீயே மெல்ல ஆரம்பித்தாய்.

காணாத படகிற்காய்
காத்திருந்து காத்திருந்து
காலத்தை
மேலும் வீணாக்க வேண்டுமா? என்று

உன் வினாவை
விளக்கமாக விளங்கிக்கொள்ள
உன் விழியில்
என் விழி பதித்தேன்.

கால் சோரக் காத்திருந்து
காலத்தைக் கரைக்காது
காலாற - நதியோரமாய்
நடந்து பார்க்கலாம் என்றழைத்தாய்.

எம் இலக்குகள்
எதிர்க்கரையின்
எதிர் எதிர்த்திசைகள்
என்பதனை நினைவு செய்தேன்.

இலக்குகள்
எமக்காகவே,
இலக்குகளுக்காக நாம் இல்லை
என்று வாதம் செய்தாய்.

என் மனத்தராசு
மேலும் கீழும் ஆடத்தொடங்கியது
முடிவாக முடிவு செய்ய முடியாமல்.......
ஒரு பக்கம்
என் அறிவின் வீச்சு
மறுபக்கம்
உன் விழியின் பேச்சு.

கெஞ்சும் உன் விழிகளை
மிஞ்ச முடியாமல்- அறிவு
தலை தாழ்ந்து நின்றது.

உன் உதட்டினில்
ஓர் வெற்றிப்புன்னகை
நீ எழுந்து நடந்தாய்
நான் உன் நிழல் தொடர்ந்தேன்.

நடக்க
நடக்க
நதியின் நீளம்
மேலும் மேலும் நீண்டு சென்றது.

எவ்வளவு
தூரம் நடந்தோம்
எவ்வளவு நேரம் நடந்தோம்
எதுவுமே புரியாத ஓர் நிலை......

நடுவழியில்
நதியின் நடுவில்
படகொன்று தென்பட்டது.
நீ கைகாட்டி வரவழைத்தாய்.
படகு எங்கு போகிறது?
என்று கேட்காமலே
விரைவாக அதில் ஏறிக்கொண்டாய்.
அன்புடன் கையசைத்து விடையும் பெற்றாய்

உன் படகு
கண் மறையும் மட்டும்
நான் கரையில் - நின்று
பார்த்துக் கொண்டு இருந்தேன்.

அப்புறம் மீண்டும்
நான் நடக்க ஆரம்பித்தேன்.
புறப்பட்ட இடத்தை நோக்கி.......



படிப்பகம்

www.padippakam.com

# உச்சம் என்பது . . !

— கே . எஸ் . துரை

அவளை முதல் முதலாய் பார்த்ததும் நான் ஆடிப்போனேன். யௌவனம் அப்படி வீசி இழுத்தது. தேகம் எந்த இடத்திலும் ஒரு கிராம் அளவுகூடக் கூடியோ குறைந்தோ போகாமல் கூர்மையாகவும்,பளபளப்பாகவும் சொட்டுச் சொட்டாய் செதுக்கியது போல வெளிப்பட்டு நின்றது. பட்டுக் கூந்தலுக்குள், " பளிச் " சென்று மாம்பழமாய் நின்றாள். கண்களிரண்டையும் மெல்ல உதறிக் கொண்டேன்.

" உங்கடை பேர் . . . "

" மீனாட்சி . "

" வித்தியாசமான பேரா இருக்கே ? "

" . . . . . . . . . . "

" . . . பரவாயில்லை . கோப்பி . . ரீ . . . சோடா . . ஏதாவது . . நீங்கள் விரும்பினால் ?"

" வேண்டாம் ! "

" உங்களுக்குப் பத்து மணிக்குத்தான் கதைக்க நேரம் ஒதுக்கியிருக்கு. அதுவரை இந்தப் பேப்பர் புத்தகங்களைப் படிச்சுக் கொண்டிருக்கலாம். நான் வந்து திரும்பவும் கூப்பிடுறன்."



அவளுடைய பெயரை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டும் நான் அப்படிக் கேட்டது சரியா? மனம் பிழையென்றே கூறியது. முதலில் பெயரைக் கேட்பது, பின்னர் அதையே கோதிக் கோதிக் கதையை வளர்த்தெடுத்துவிடும் என்பாணிக்கு அவள் தன் மௌனத்தால் ஒரு உருண்டையான முற்றுப் புள்ளி போட்டுவிட்டாள். பிடிவாதம் பிடித்துக்கொண்ட கண்கள் மறுபடியும் அவளின்மீது ஒழுக்கக்குறைவாய் பாய்ந்தது. அதன் சுதந்திரப் பாய்ச்சலுக்குக் கடிவாளம் போட வழி தெரியாது கதவை மட்டும் இழுத்துச் சார்த்திக் கொண்டேன்

"பாவிப்பயல் கிரி இவளைப் போய் வேண்டாமென்று சொல்கிறானே ? ஏன் . . . இவளுக்கு என்னவாம் குறை ?" அறிய வேண்டும் என்பது அந்தரமும் அவசரமுமாய் அலப்பாரித்தது. கடிகாரத்தைப் பார்த்தேன் பத்துமணிக்கு யுகங்கள் போல ஐந்து நிமிடங்கள் பாக்கியிருந்தன.

அவளைப் பற்றிய தகவல்கள் அடங்கிய சிறு குறிப்புரையை நேற்றே படித்துப் பார்த்து விட்டேன். அவளின் டென்மார்க் வாழ்க்கையின் அகவை ஆறு மாதங்கள் மட்டுமே. கருத்துள்ள பெண். தான் நினைத்ததை சரியென வாதிடுமளவிற்கு படிப்பிருந்தது. சூழ்நிலைக்குள் இசை வாக்கம் பெற முடியாததால் அவளது இளைய மண வாழ்க்கை முறிவடைந் திருக்கிறது. என்பன போன்ற தகவல்களை அதன் மூலம் மேலோட்டமாக அறிந்து வைத்திருந்தேன்.

இங்குள்ள தமிழர்களிடம் விசாரித்துப் பார்க்கவும் எனக்கு அதிக வாய்ப்பில்லை. டெனிஸ் மனைவி, கருப்புத் தலையும் வெள்ளரிப்பழ மேனியுமாய் ஒரு மகள். டெனிஸ் சமூகத்திற்குள் புதைந்து போன வாழ்க்கையென ஒதுங்கி இருக்கும் எனக்கு தமிழர்களோடு தொடர்பு குறைவு. இந்த மொழி பெயர்ப்பு வேலை ஒன்றுமட்டும்தான் அடிக்கடி என்னைத் தேடிவரும் ஒரேயொரு தமிழ் நண்பன். அனெலீசாவும் நானும் காலையிலேயே அவள் கணவன் கிரியுடன் கடைசி முறையாகப் பேசி முடித்து விட்டு வந்திருந்தோம். அவனின் முடிவில் எந்த மாற்றமுமே இல்லை.

மறுபடியும் சமூக சேவைகள் அதிகாரியின் அறைப் பக்கமாக நோட்டம் விட்டேன். உள்ளே யாரோ



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பிரகிருதி மேசையில் அடித்துக்குத்தி சத்தமாகக் கொக்கரித்துக் கொண்டிருந்தது.

கோயில் மூலஸ்தானத்தை விட இந்த அறைக்கு மகிமை அதிகம். தங்கள் அந்தரங்கங்களையும், மற்றவர்களின் வாழ்க்கையையும் உள்ளே வந்தவுடனேயே பலர் அவிழ்த்துக் கொட்டிவிட்டு, அறையின் ஜோதியில் அப்படியே கலந்து போய் விடுவார்கள். இந்த அருள் பெற்ற அடியார்களின் கதையை வெளியில் சொல்ல முடியாதவாறு என் வாயில் இரகசியக் காப்பு, சத்தியப் பிரமாணமென ஏகப்பட்ட இரும்புப் பூட்டுக்கள் கொழுவிக் கிடந்தன.

கையில் வெண் சுருட்டை ஏந்தியபடி யோசனைப் படிகளில் வழுக்கி வழுக்கி விழுந்து கொண்டிருந்தேன். சரியாகப் பத்து மணிக்கு அழைப்பு வந்தது. மீனாட்சியையும் கூட்டிக்கொண்டு அறைக்குள் போய் அனெலீசாவின் கையைப் பற்றி, ஒரு குலுக்குக் குலுக்கினேன்.

மீனாட்சியைக் கண்டதும் அனெலீசா எழுந்துநின்று சிரித்தாள். அவள் கையை இரண்டு தடவைகள் குலுக்கி கடைசியாக, "உனக்கு மட்டுமே" என்பது போல மேலதிகமாக ஒரு உன்னலுடன் கையை அழுத்தி வரவேற்றாள். பதிலுக்கு வந்த மீனாட்சியின் சிரிப்பிற்குள் அனெலீசாவிற்கான வணக்கம் மரியாதையோடு வந்து போனது.

மூவரும் ஒன்றாக அமர்ந்து கொண்டோம். உரையாடலின் வழிநெடுகக் கற்களையும், முட்களையும் தூவி, பாதி வழியிலேயே வேதனைப் பட்டுப் போகும் அதிகாரிகளைப் போலல்லாது நோகாமலே பேசும் திறமை படைத்தவள் அனெலீசா. அவளுடைய சொற்கள் ஒவ்வொன்றும் பட்டுக் கம்பளத்தில் நடத்திச் செல்வது போல வருத்தமின்றி கூட்டிச் செல்லும்.

மீனாட்சியின் காலடிக்குள் அவள் ஒரு மிருதுவான வெல்வெற் கம்பளத்தை விரித்து விட்டதை என் அனுபவத்தால் கண்டு கொண்டேன்.

பத்து வருடங்களாகத் தமிழர்களை கரைத்துக் குடித்திருக்கும் அனெலீசாவின் நீலக்கண்களில் இப்பொழுது ஒரு புதிய மூக்குக் கண்ணாடி கெம்பீரமாகக் குந்தியிருந்தது. என்னை ஒருமுறை சரிந்து பார்த்தாள். வழமையான சாத்துப் படிகள் முடிந்து விட்டதை அந்தப் பார்வைக்குள் கண்டு கொண்டு, மொழி பெயர்ப்புக்காகக் குரல் வளையை உரசிக் கொண்டேன்.

" உமக்கும் கிரிக்கும் திருமணத்திற்கு முன்பே பழக்கமிருந்ததா ?"

" இல்லை ."

" அவர் உமக்கு உறவினரா ? "

" இல்லை ."

" அப்படியானால் அவர் உம்மை என்ன அடிப்படையில் திருமணம் செய்ய முன்வந்தவர் ?

" நான் அழகா இருந்திருக்கலாம்."

அனெலீசா அவளைக் கூர்ந்து பார்த்தாள். அவள் அழகிதான் என்பதை ஆமோதித்துக் கொண்டே, "வெறும் அழகை மட்டும் மூலதனமாக வைத்துக் கொண்டு, திருமணத்தை நடத்திவிட முடியுமா ? " என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

" எங்கடை சமூகத்திலை பெரும்பான்மையான ஆட்கள் அழகு, பணம் இவை இரண்டையும்தான் திருமணத்தின் அடிப்படை என்று நினைக்கினம் ."

அனெலீசா சரியா ? என்றவினாக் குறியோடு என்னைக் கூர்ந்து பார்த்தாள். நான் வெறும் தமிழ் டெனிஸ் அகராதியாகவே இருந்தேன். சொந்தக் கருத்துக்களைக் கூறி வயிற்றுப் பிழைப்பில் மண்ணள்ளிப் போடாத இளித்த வாய்ச் சிரிப்பை என் முகம் முழுவதும் பூசி வைத்திருப்பதைக் கண்டு, மறுபடியும் மீனாட்சியின் பக்கமே திரும்பிக் கொண்டாள்.

" உம்முடைய அழகை கிரி எப்படிக் கண்டு கொண்டார் என்றாவது நான் அறியலாமா ?"

" வீ . டி . ஓ / கசற் மூலம் தான் அவர் என்னை முதல் முதலா பார்த்தவர். எந்த விழாக்குப் போனாலும், கலியாண வீட்டிலை அரசாணி மரம் நட்ட மாதிரி அதைத்தான் நடுவிலை வைச்சிருப்பினம். தலையிலை இருந்து கால்வரை படமெடுக்கிற நரக வேதனைகளை இதைப் பார்த்தால் நீங்களும் விளங்கிக் கொள்ளலாம். " என்றபடி ஒரு ஒளி நாடாவைப் பையிலிருந்து எடுத்து நீட்டினாள். அதை வாங்கிய அனெலீசா ஒரு முறை பயன்படுத்தினாள்.

அது ஒரு திருமண நிகழ்ச்சி. எங்கேயோ ஒரு கோயிலில் நடந்திருக்கிறது. முகங்கள் தெரியாத உடல்கள், உடல்கள் இல்லாத முகங்கள் என்று ஒரு வயது வந்தோருக்கான சினிமாவே எடுக்கப் பட்டிருப்பது தெரிந்தது. மீனாட்சி கண்களை மூடி, கைகள் இரண்டையும் தலைக்கு மேலாக உயர்த்தி வணங்கியபடியே நின்றாள். தருணம் பார்த்த வீ . டி . ஓ



படிப்பகம்

www.padippakam.com

படப்பிடிப்பாளர் மனம் போல அவள் உடலெங்கும் மேய்ந்து தள்ளியிருந்தார். அதற்கு மேலால் முக்கலும் முனகலுமாக ஒரு அசிங்கமான சினிமாப் பாடல் பதிவாகியிருந்தது. ஒரு அழகான பெண்ணை ஆபாசப் படத்தோடு பார்த்து, அதே அசுர வேகத்தில் இந்தத் திடீர் திருமணம் அரங்கேறியிருப்பதைக் கண்டுகொண்டேன். மீனாட்சி நிற்குமிடங்களை மட்டும் திருப்பித் திருப்பிப் பார்த்திருப்பதால் அந்த இடங்களில் மட்டும் காயம் பட்டது போல் ஒளிநாடாவில் கோடுகள் விழுந்திருந்தன.

" கலாச்சாரம் பற்றி நிறையப் பேசுகிறீர்கள் இந்த மாதிரி வீடி.ஓ கலாச்சாரமும் உங்களுடை யதுதானா ?" என்று கேட்பது போல அனெலீசா ஒரு பார்வையை வீசினாள். அந்தச் சவுக்கு என்னையும் ஒரு சுற்றுச் சுற்றிப் பாட்டமாக விழுத்தியது. தொலைக் காட்சியை அணைத்து விட்டு மறுபடியும் வந்து அமர்ந்து கொண்டாள்.

" இப்படியான வெறும் படத்தை மட்டும் பார்த்துவிட்டு ஒரு திருமணமே நடந்தும் முடிஞ்சிருக்கு மற்ற விசயங்களைப் பற்றி உம்முடைய பெற்றோர் ஆராய்ந்து பார்க்கவில்லையா ? "

" இல்லை! அதைத் துருவித் துருவி ஆராஞ்சால் மற்றவைக்கு விசயம் தெரிஞ்சுபோடும். . . பிறகு அதே சனமே முடைஞ்சு விட்டுக் கலியாணத்தையும் குழப்பிப் போடுங்கள்.எங்களைப் பொறுத்தவரை கலியாணம் முடியும்வரை எல்லாம் காதும் காதும் வைச்சபடிதான்." மீனாட்சி சொன்னதை அனெலீசா கூர்மையாகக் கேட்டபடியே சுவரில் ஒட்டியிருந்த சிறு விளம்பரத்தையும் ஓரக்கண்ணால் பார்ப்பது தெரிந்தது.

குழந்தையின் படமொன்றுடன் கூடிய அந்தச் சுவரொட்டியில் , " பெற்றோரின் ஆளுமையே பிள்ளையின் அத்திவாரம்." என்று எழுதியிருந்தார்கள். அவசரக் கலியாணங்கள் பிரசவித்த அந்தக் குழந்தையின் கையறு நிலையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இதையும் ஒரு காரணத்தோடுதான் ஒட்டியிருக்கிறார்கள் என்று நினைவுகளில் அமிழ்ந்தவன் இடையில் அனெலீசா ஏதோ கூறத்தொடங்கவே மறுபடியும் விழித்துக் கொண்டேன்.

" நீங்கள் முதல் பிழையையே பெரிய பிழையாக விட்டிருக்கிறியள். இந்தப் பத்திரிகையைப் பாரும்.." என்று கொழுவியிலிருந்த வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்து வந்து மேசையில் புரட்டிப் போட்டாள். அதில் ஒரு பக்கம் முழுவதும் இவ்வாரம் திருமணம் செய்த வர்களின் புகைப்படங்களே நிறைந்திருந்தன.

சிறிது நேரம் அதையே பார்த்த படியிருந்த மீனாட்சி , " நிறையத் தம்பதிகளுக்கு நாற்பது வயது தாண்டியிட்டுது. . எல்லாமே வயசு கழிஞ்ச திருமணங்களாக் கிடக்கு. " என்று தனது கருத்துக்களைக் கூறியபடியே பத்திரிகையை ஓரமாக மடித்துவைத்தாள்.

"திருமணத்தை விளங்காத வயதில் திருமணமும், பிள்ளை வளர்ப்பை அறியாத நிலையில் குழந்தையும் ஆபத்தானவை என்ற தெளிவு திருமணத்திற்கு முந்தியே வரவேணும். ஆனால் நீரோ எந்தவிதமான முன் ஆராய்வுமில்லாமல் திருமணமே செய்திருக்கிறீர் . ! ம் . . கிரி ஏற்கெனவே ஒரு டெனிஸ் பெண்ணோடை வாழ்ந்திருக்கிறார் . . என்ற செய்தியாவது உமக்குத் தெரியுமா . . ? "

" ம்ஹூம் . ! அதை நான் அறிய முந்தியே எல்லாம் முடிஞ்சுது. அப்பிடிப் பட்ட விஷயங்களை கலியாணத்துக்குப் பிறகு ஆராய்ந்தால் இருக்கிற வாழ்க்கையும் நரகமாப் போயிடுமே. .? உண்மையாக கிரியின்ரை பழைய கதையைக் கேள்விப்பட்ட உடனேயே நானும் ஒரு வழிதவறின ஆணுக்கு வாழ்வழிச்சிருக்கிறனே என்று எனக்குள்ளேயே நினைச்சுத்தான் ஆறுத லடைஞ்சன். ஆனால் கிரியோ . . . " என்று இடையிலேயே நிறுத்திக் கொண்டாள். அவள் சொல்லாமலே விட்டுவிட்ட செய்திகளெல்லாம் கண்களின் சுரப்பிகள் வழியாக நீராகி வெளியே கசிவது தெரிந்தது.

" இதிலை உம்முடைய பாஸ்போட் இருக்கு . . இது உமக்கான ஒருவழிப் பயண விமான ரிக்கற் . . இது வழிச் செலவுக்கான பணம். நாளை காலை சரியாக ஏழு மணிக்கு உமக்கு விமானம் ." என்று சட்டென விஷயத்திற்குள் பாய்ந்தாள் அனெலீசா. இதுவரை தமக்குள்ளேயே பந்தை உதைத்துக் கொண்டிருந்த அணியொன்று திடீரென்று பந்தை வேகமாக எதிரணிக்குள் உதைத்தது போல, கோல் போடும் எல்லைக்குள் அவள் தலை தலையை நீட்டிவிட்டது தெரிந்தது.

மீனாட்சிக்கு ஒருவேளை இது அதிரடியாக இருந்திருக்கலாம். அவள் கேவிக் கேவி அழுதாள். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தாள். அவள் கன்னங்களின் திட்டுக்களில் இரத்தம் கண்டித் தெறித்தது. கண்களைத் துடைக்கத் துடைக்க நீர் கட்டுப்படாது பெருகியது. ஏனென்று தெரியாது எனக்குள் எழுந்த கோபம் யாராவது ஒருவரின் கன்னத்தில் ஓங்கி விளாச வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

" குமார் இதிலை கிரி சொன்ன குற்றச்சாட்டுக்கள் எல்லாம் வரிசைக் கிரமமாக எழுதியிருக்கு. எதற்கும் அதையும் ஒருக்கா வாசிச்சுக் காட்டும்." என்று ஒரு "ஏ நான்கு" அளவுத்தாள்களைக் கொண்ட கட்டை என் எதிரில் போட்டாள். அவற்றை வடிவாக வாசித்து விட்டு அவளிடம் சாராம்சத்தை மட்டும் எடுத்துச் சொன்னேன்.

" ஒன்று ; எவ்வளவோ பிரயத்தனப் பட்டும் நீர் கிரி விரும்பின வாழ்க்கை முறைக்கு இசைவாக்கம் அடையவில்லை. இரண்டு ; உம்முடைய ஊரைச் சுற்றியிருக்கிற எந்தக் கோயிலில் கொடியேறினாலும் நீர் விரதம்தான். உம்மாலை வேலைக்குப் போற அவரும் விரதம். செவ்வாய், வெள்ளி , சனி மூன்று நாட்களும் மரக்கறி . . இதைவிட ஆவணிஞாயிறு , ஐப்பசி வெள்ளி , கார்த்திகைத்திங்கள் என்று வருசம் முழுவதுமே விரதங்கள் .இவைகளாலேயே அவர் நிறையக் களைத்துப் போனார். மூன்று ; கிரியின் டெனிஸ் நண்பர்களோடை உம்மாலை சரிவரப் பழக முடியேல்லை. நான்கு ; பப்படம் , வத்தல் மிளகாய் , சுண்டங்காய்ப் பொரியல், தோசை , இட்டலி என்று சாப்பாட்டு முறைகளைக் கூட நீர் இதுவரை மாற்றியமைக்கவில்லை. . . உமக்கு ஒரு டெனிஸ் சாப்பாடு கூடத்தயாரிக்க முடியாது" என்று அடுக்கிக் கொண்டே போனேன். அவள் என்னை இடையில் மறித்துக் கேட்டாள்.

" இதெல்லாம் நான் சின்ன வயசிலே இருந்தே தெரிந்தோ தெரியாமலோ பழகின பழக்கங்கள். பழக்கங்களை காலத்துக்கேற்ப மாற்றத்தான் வேணும். ஆனால் எல்லாத்தையுமே எப்பிடி ஒரேயடியாக கையைவிடுறது? எதுக்குமே கொஞ்சக் காலம் எடுக்கு மெண்டாவது யோசிக்க வேண்டாமோ ?"

" நீர் சொல்லுற நியாயத்தைக் கிரியும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் பாலியல் கல்வியை பாடசாலையிலை படிக்காமல் வாழமுற்படுற வாழ்கையிலை ஒரு முழுமை பெறமுடியாது என்று அவர் வாதாடுறார். பாலியல் கல்வியை சின்ன வயசிலேயிருந்தே படிச்ச ஒரு டெனிஸ் பெண்ணோடை அவர் வாழ்ந்திருக்கிறார். பிறகு அதே வாழ்க்கையை உம்மோடையும் தொடங்கின பிறகுதான் மலைக்கும் மடுவிற்குமான ஒரு பெரிய இடைவெளியை அவர் கண்டிருக்கிறார். உம்முடைய ஆசாரங்களுக்குள்ளாலை இந்த உச்சங்களை அடைய உம்மாலை முடியாது. அவரை அனுசரித்துப் போக முடியாத உம்மோடை தொடர்ந்து வாழ்வது பயனற்ற தென்றே அவர் உறுதியாக சொல்லுறார். நீங்க ரெண்டுபேரும் பிரிந்து போறதிற்குப் பிரதான காரணமே இதுதான். " என்று கூறிமுடித்தேன். அவள் இம்முறை என்னையே பார்த்தபடி தன் கேள்வியைக் கேட்டாள்.

" இந்தக் குறிப்பை நீங்கள் படிச்சுக் காட்ட முந்தி, கிரி ஏன் அந்த டெனிஸ் பெண்மணியோடை வாழ முடியாமல் போனது . . ? என்ற கேள்விக்கும் விடை சொல்லியிருக்க வேணும். ." என்றாள் . நான் அதை மொழி பெயர்த்தேன்.' கேட்டவுடன் அனெலீசா வருத்தமாகச் சிரித்துக் கொண்டாள். .

" அந்த டெனிஸ் பெண்ணையும் நாங்கள் விசாரிச்சிருக்கிறம். உம்மை என்ன காரணத்திற்காக கிரி வேண்டாமென்றாரோ அதே காரணத்திற்காகத்தான் அவளும் கிரியை வேண்டாம் என்றிருக்கிறாள்." என்றபடி அனெலீசாவின் குரல் மெல்லப் பதுங்கி, பூனைபோல என் முன்னால் வந்து குந்தியது.

" எலியைப் பூனை வருத்தும், பூனையை நாய் வருத்தும் என்ற மாதிரித்தானே எல்லாம் நடந்திருக்கு . . இதிலையிருந்து நீங்களாவது சில விஷயங்களை விளங்கியிருக்க வேணும் . ? " என்று அவள் சற்றுக் காட்டமாகக் குரல் கொடுத்துக் கேட்டாள். அனெலீசா பதிலின்றி மெளனமாக இருந்தாள். ஒரு சில வினாடிகளில் மீனாட்சியே பதிலையும் கூறினாள்.

" திருப்திக்கு உச்சப் புள்ளி கிடையாது. உச்சங்களையும் திருப்திகளையும் தேடி நாங்கள் டென்மார்க் வரை வந்தது முதல் பிழை. இங்கை வந்தும்; உச்சத்திற்கு முற்றுப் புள்ளி கிடையாது என்பதை கண்டு பிடிக்க முடியாமல் அலையிறது அதைவிடப் பெரிய பிழை ! " என்று கூறிவிட்டு எழுந்தாள்.

இப்பொழுது அனெலீசாவின் வைரத் தோடுகள் போன்ற கண்களில் ஒளி தெறித்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டு மீனாட்சியையே பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். மலிவு விலை (TILBUD) விளம்பரப் பத்திரிகைகளில் மறைந்து போகாத ஒரு தமிழ்ப் பெண்ணின் முகத்தைப் பார்த்த திருப்தியை அவளின் கண்களிலிருந்து என்னால் தெளிவாக வாசிக்க முடிந்தது.

இப்படிப்பட்ட ஒருத்தியே இங்கு தேவையானவள் என்று ஒரு வேளை அனெலீசா நினைத்திருக்கலாம், " நீர் இந்த நாட்டில் தொடர்ந்தும் வாழ விரும்புகிறீரா. .?" என்று அவளைப் பார்த்து ஆதரவாகக் கேட்டுக் கொண்டாள்.

" கேட்டதற்கு நன்றி . . உங்கடை சட்டப்படி இனி எனக்கு இந்த நாட்டிலை இருக்க அனுமதி கிடையாது. நான் ஊர் திரும்பச் சம்மதம் தெரிவிச்சுக் கையெழுத்தும்



படிப்பகம்

www.padippakam.com

வைச்சிட்டன்."

" நீர் இங்கை இருந்தது கொஞ்ச நாட்கள்தான் ; ஆனால் அனுபவங்கள் நிறைய என்று நினைக்கிறன். . ! "

" உண்மைதான் இங்கை நிறையப் பேர் நாட்டை விட்டு மட்டுந்தானே புலம் பெயர்ந்திருக்கிறம் என்று பத்து வருஷங்களா நினைச்சுக் கொண்டிருக்கினம். இது பெரிய பிழை. உண்மையிலை இப்ப நாங்கள் எங்கடை இனத்தை விட்டும் புலம்பெயரத் தொடங்கிவிட்டம். . ! " என்று ஆணி அடித்தது போலச் சொன்னாள். அவள் முகத்திலும், தொனியிலும் நிதானம் கூர்மை பெற்றிருந்தது. கண்ணீர் வெள்ளத்தில் அடிபட்டுப் போய்விடாது அவள் நிமிர்ந்து நின்றாள். வழியற்ற நானும், அனெலீசாவும் வழமைபோல ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

" கடைசியாக நீர் கிரிக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீரா ? " இதை அனெலிசா தயங்கித் தயங்கியே கேட்டாள். அது போலவே நானும் தயங்கித் தயங்கியே சுவைகெடாத தமிழில் எடுத்துச் சொன்னேன்.

" இனி என்னத்தைச் சொன்னாலும் அது பயனில்லாத விஷயந்தான். இருந்தாலும் பாலியல் கல்வியை பரீட்சார்த்தமாகப் படித்த கிரியின்ரை மேதைத் தனத்திற்கு முன்னாலை நான் ஒண்டுமே தெரியாத பாமரப் பெண்ணா நிக்கிறதிலை பெருமைப் படுறன். என்றதை மட்டும் மறக்காமல் சொல்லிவிடுங்கோ . . ! " என்றுவிட்டு ஒரு கடித உறையை முன்னாள் நீட்டினாள். அதை அப்படியே வேண்டி அனெலீசாவிடம் கொடுத்தேன். அதற்குள் அவளின் மூன்று சோடிகாப்புகள் இருந்தன. எதற்கு என்பது போல அனெலீசா ஆச்சரியமாகப் பார்த்தாள்.

" கிரி வந்தால் இந்தக் காப்புகளையும் அவரட்டைக் கொடுத்திடுங்கோ . ! இந்தப் பிளைட் ரிக்கட்டுக்காக அவரட்டை நான் கடமைப்பட விரும்பேல்லை . . ரூசன் ரக் போ ஜெல்ப் . . . போவெல் . . . ! சிரித்தாள் . இது மட்டுந்தான் ஆறுமாதமா நான் பழகின டெனிஸ் வணக்கம். " என்றபடி அவள் கடைசிப் புகைவண்டிபோல கடகடவென படிக்கட்டுக்களால் இறங்கி மறைந்து விட்டாள்.

அனெலீசா எஞ்சியிருக்கும் என்னை மட்டும் பார்த்தாள். என்னிடம் பேச மொழியில்லை. புலம் பெயர் வாழ்க்கை இன்னொரு பண்பாட்டுப் புலம் பெயர்தலுக்குள் இடம்மாறி விட்டதா . ? மேலங்கியையும், தொப்பியையும் எடுக்க மறந்து போய் காற்றில் பறக்கும் கடதாசி போல எனது காரை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

குறுநாவல் – தொடர்

(5)



நள்ளிரவு. உள்ளேயும் வெளியேயும் கும்மென்ற இருட்டு நிலத்தில் விரித்த பாயில் எழுந்து குந்திக்கொண்டிருக் கிறேன்.
ஆம்! நான் டனிஷா.

டென்மார்க்கிலிருந்து வந்ததிலிருந்து தங்க இடம்தந்த பொன்மணி அர்ச்சுனன் குடும்பத்தினர் எம்மில் முகம்சுழித்து வெகுநாளாகிவிட்டது.

இப்போது அவர்களுடைய பின்வளவில் ஒரு சிறுகுடிசை அமைத்துத்தந்துவிட்டார் அப்பா.

இப்படி நாம் பிரிந்து வாழ்வது; அவர்களுக்கும் சந்தோசம். எமக்கும் சந்தோசம். இப்படி தனியாக வாழத்தொடங்கி இன்றுடன் 3 நாட்கள்தான்.

சிறுகுடிசைதான். ஆனால் இது எமது.அதுவும் எனக்கென்று ஒரு தனி அறைமாதிரி அப்பா ஏற்படுத்தித் தந்திருக்கிறார். மரத்தடிகளும் தென்னங்கிடுகுகளுமாக ஒரேநாளில் தயாரானதுதான்.

டென்மாக்கிலிருந்து வந்ததற்கு நான் இன்னமும் சரியாகத் தூங்கியதில்லை.எல்லோரும் தூங்கிவிட்டபிறகு கண்ணுளைவில் தூங்கிவிடுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

சொகுசான கட்டில்மெத்தை, குளிருக்கு இதமான கம்பளப்போர்வை, சுவரை அலங்கரிக்கும் எனது விருப்பத்திற்கேற்ற படங்கள்,எனக்கென்ற ஒரு வர்ணத்தொலைக் காட்சிப்பெட்டி, மேலைத்தேய இசையை அள்ளித்தரும் விலையுயர்ந்த அந்த பாட்டிசைக்கும் பெட்டி..

அத்தனையும் இன்றென்னோடில்லை.

அப்படியான வாழ்வு திரும்பவும் எனக்குக் கிடைக்குமா?

நான் எனது அறையில் பாவித்த மின்விளக்கு. அது அழகானது.கை அசைவிலேயே ஒளிர்ந்தும், இன்னொரு கைஅசைவிலேயே மெல்லஅணைந்தும் கொள்கின்ற நவீன மின்விளக்கு அது. அவற்றைவிடவும் நான் வளர்த்தநாய் "பப்பி"......எத்தனை எத்தனை...... எல்லாமெனக்கென்றே இருந்தது.அவை எனக்கில்லாமற்போன துயர் என்மனதுள் இறுகிப்போய் கிடக்கிறது. இன்னும் நான் அவற்றை மறக்க முயற்சிக்கிறேன். ஆனால் இன்று நான் அனுபவிக்கும் கசந்த வாழ்வு அவற்றை மீட்டுக்கொண்டுவந்து நிற்கிறது. அவற்றை நான் மறக்க முயற்சிப்பதே அதை நான் நினைவு கொள்வது மாதிரி.



எனது பெருமூச்சு எழுந்து அடங்கிக்கொள்கிறது.

எந்தநேரமும் அசையாது என்னுள் இருக்கும் உருவம். அது கென்றிக்கினுடையது.

அவன் அழகானவன்.அன்பானவன்.இங்குவரும்போது அவனுடைய புகைப்படமொன்றை கையோடு கொண்டு வந்துவிட்டேன். அல்லது என்றோ ஒருநாள் அந்த உருவம் என்னிலிருந்து அழிந்துவிடுமா?

இப்போது அவனுடைய படத்தைப்பார்க்கவேண்டும்போலுள்ளது. அயலில் கைகளை உரசித்தடவி தீப்பெட்டியை எடுத்துக்கொள்கிறேன்.ஒரு சுவாலையை எழுப்புகிறேன். பக்கத்திலிருந்த கைவிளக்கு தீக்குச்சியை தொட்டு வாங்கி தானும் எரிகிறது.

என்னைச்சுற்றியிருந்த இருள் விலகுகிறது.எனது பாயின் பக்கத்து கிடுகிடுக்கில் செருகப்பட்டிருந்த படத்தில் கென்றிக் அழகாக இருக்கிறான்.

எனது கண்களைஅழுத்தித்துடைத்துக்கொள்கிறேன். மீண்டும் ஒரு பெருமிச்சு என்னுள் எழுந்து போகிறது. பாயோடு கிடக்கும்; அந்த எண்ணை மணமும் அழுக்கும் படிந்த தலையணையை எடுத்துஎன் நெஞ்சோடு இறுக்கிக் கொள்கிறேன். முழங்காலில் எனது முகம் சரிந்துகொள்ள யோசனையில் ஆழ்கிறேன். எனது அறைக்கு கதவில்லை. அந்தக்கதவும் தயாராகிவிட்டால் இந்த அறைக்குள்ளேயே அடைபட்டுவிடலாம். அப்படியான தனிமையையே நான் இப்போது விரும்புகின்றேன்.

இந்தக்கைவிளக்கொளியில் மெல்லீதாக வெளியே தெரியும் அந்த புதிய முற்றத்தை பார்க்கிறேன்.

எங்கோ ஒரு தோட்டத்திலிருந்து அதன் தாய்வாழையிலிருந்து பிரட்டிப் பிடுங்கி எடுக்கப்பட்டுவந்து எமது புதிய முற்றத்தில் நடப்பட்ட அந்த வாழைக்குட்டி வாடிப்போய் இருப்பதும் மங்கலாகத்தெரிகிறது.

அந்த வாடிப்போயிருக்கும் வாழைக்குட்டியைத்தாண்டித்தான் சூரா நாயை இரவு கட்டிவைத்தேன். காலையில் தான் அதைப்பார்க்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

"சூரா" அது அர்ச்சுனன் வீட்டுக் குட்டைநாய்.
நேற்றுத்தான் அதைப்பிடித்துக்கட்டி,கதறக்கதறக் குளிப்பாட்டி அழகாக்கிவிட்டேன். செம்பாடாக பழுத்துக்கிடந்த அதன் உருவத்தைமாற்றி, அதன் மயிர்களை கத்தரித்து அழகுபடுத்தி விட்டேன்.
அது எப்போதும் அழுக்குகளுக்குள் குழிதோண்டிப்படுத்திருக்கும்.
அந்த அனாதரவான நாய் இப்போது என்னுடையது.
அது என்னுடனேயே இருக்கவேண்டும்.
ஆனால் இந்த "சூரா" நாய்; நான் டென்மார்க்கில் வளர்த்த பப்பியைப்போல் அழகானதல்ல.என்மீது அன்பானதுமல்ல.
எப்போதும் சூரா என்னை வெறுப்போடுதான் பார்க்கிறது.
அடிக்கடி இறுமிக்கொண்டு தனது கோரப்பற்களைக் காட்டுகின்றது.

காலையானதும் அதை இன்னொருதடவை குளிப்பாட்டி எடுத்து அதை நந்திக்கடற்கரைக்கு உலாக்கொண்டு போகவேண்டும்.
ஆனால் தெருநாய்களை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. நேற்று சூராவை உலாக்கொண்டு போனபோது தெருநாய்கள் செய்த அட்டகாசத்தை என்னால் இன்னும் மறக்கமுடியாதிருக்கிறது.
தெருநாய்கள்தான் பரவாயில்லை.
முன்பொரு தடவை ......சரியான வெய்யில்.ஒரே புழுக்கம்.
கையோடு இறுக்கிப்போட்ட சட்டையும், உடம்பு முழுக்க வரிச்சுக்கட்டிய சேலையுமாக பொன்மணியும், அம்மாவும் புழுங்கிக்கொண்டிருந்தார்கள்.
கையில் ஆளுக்கொரு கைவிசிறி.
எனது அப்பா நவாவும், அர்ச்சுனனும் வெறும்மேலோடு இருந்தனர்.என்னால் இந்தப்புழுக்கத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை.
கிணற்றடிப்பக்கமாக இருக்கும் மாமரத்தின்கீழ் ஒரு துண்டை விரித்துக்கொண்டு, எனது மேலாடைகளை கழற்றிவிட்டு இதமாக படுத்துக்கொண்டேன்.
நல்லஇதமான காற்று வீசுவது நன்றாக இருந்தது.
திடீரென அந்தப்பக்கமாக வந்தஅர்ச்சுனன் என்னைப்பார்த்துவிட்டு திரும்பிக்கொண்டதுமல்லாமல் காறி உமிழ்துவிட்டுச் சென்றான்.
இப்படித்தான் நான் டென்மார்க்கில் வாழ்ந்தபோது வீதியில் என்னைக்காணும்போதெல்லாம் ஒரு வெள்ளைக்காரன் காறிஉமிழ்ந்துவிட்டுச்செல்வான்.
அந்த இதமான காற்றில் புழுக்கமின்றி சந்தோசமாக இருந்தேன்.
கொஞ்சநேரத்தில்
வேலி இடுக்கெல்லாம் கண்கள்.
ஊரின் அத்தனை பையன்களும் வேலிஇடுக்கால் என்னையே பார்த்துக்கொண்டிருந்தனர்.அவர்களைப்பார்க்க எரிச்சலாக இருந்தது.கற்களை எடுத்து அவர்கள்மீது விட்டெறிந்தேன்.அப்போது பக்கத்துவீட்டு மாமரத்திலிருந்து ஒரு விசில்சப்தம். விசில் வந்த திசையை பார்த்தேன்.
ஒரு வாலிபன் என்னைப்பார்த்து கையசைத்துக்கொண்டிருந்தான். நானும் பதிலுக்கு கையசைத்தேன்.
அதனைக்கண்ட எனது அம்மா என்னை அடித்து,கழற்றிய சட்டைகளை போடவைத்து கூட்டிப்போனதும் எனக்கு ஏனென்றே இன்னமும் புரியவில்லை.
இந்த ஊரில் எனக்கு எல்லாமே புதிதாக இருக்கிறது,
இந்த ஊருக்கு நானும் புதியவளாக தெரிவதுபோல.......
எனது நினைவுகளும் நானுமாய் பாயில் சும்மா இருக்கிறேன்.பக்கத்தில் கைவிளக்கு ஆடிஆடி எரிகிறது.
எனது அறையை மறைத்துக்கிடக்கும் செத்தையினூடாக வெளியே பார்க்கிறேன்.
அதிகாலை மலர்ந்துகொண்டிருந்தது. எனக்குப்பிடித்த அந்தக்குருவிகளின் சப்தம் கேட்பதைமறந்து நீண்டநேரம் எனது பழைய நினைவுகளுடனேயே இருந்துவிட்டேன்
அவசரஅவசரமாக கைவிளக்கை நூர்த்துவிட்டு எரியும் எனது கண்களை கசக்கிக்கொள்கிறேன்.
எனது பாயை சுருட்டி வைக்க முயல்கிறேன்.
அது சுருட்டச்சுருட்ட விரிந்துகொண்டே இருக்கிறது.
அடக்கமுடியாத எனது நினைவுகள்போல அதை அப்படியே விட்டுவிட்டு வெளியே வருகிறேன்.
"Godmorgen" டனிஷா என்கிறது அது
பதிலுக்கு "Godmorgen" என்கிறேன் நானும். அது இப்போதெல்லாம் நன்றாக டனிஸ் கதைக்கிறது.
அது இதுதான்.
இது எனது பச்சைக்கிளி.
அர்ச்சுனன் பிடித்துத்தந்து நான்வளர்க்கும் அழகான பச்சைக்கிளி.
கூட்டைவிட்டு இறங்கி எனது தோள்களில் இருந்துகொள்கிறது.
சூராவைப்பார்க்கும் ஆர்வத்தோடு முற்றத்தில் இறங்குகிறேன்.
அது கட்டப்பட்டிருந்த இடத்தில் அறுக்கப்பட்ட கயிறுதான் இருந்தது.
கையில் கிளியோடு அர்ச்சுனன் வீட்டுக்குள் ஓடுகிறேன்.
"சூரா" அது அதே அழுக்குக்குழிக்குள் காலை நீட்டி முகத்தைப் புதைத்தவாறு படுத்திருக்கிறது.
அருகே அர்ச்சுனன் தடியொன்றால் பல்விளக்கியபடி ஒரு வேப்பமரத்தில் சாய்ந்துகொண்டு துப்பிக்கொண்டிருக்கிறான்.
சூராவை அழகாக்கும் முயற்சி பலிக்காதா என்ற கேள்வியோடு..........
நான் எனது பச்சைக்கிளியோடு வீடுதிரும்புகின்றேன்.

தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Til: Chanchive
Danmarksgade 10
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்